# யார் துரோகிகள்?


## சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை


நூலாசிரியர்


**எம்.எம்.எம்.நூறுல்ஹக்**

பதிப்பாசிரியர்

**உவைஸ் முஹம்மட்**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












**வெளியீடு**

மருதம் கலை இலக்கிய வட்டம் (நூலகம்)
129B, ஒஸ்மன் வீதி, சாய்ந்தமருது - 05
077 2612094


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் துரோகிகள்?

சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை

நூலாசிரியர்

**எம்.எம்.எம்.நூறுல்ஹக்**

பதிப்பாசிரியர்

**உவைஸ் முஹம்மட்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் துரோகிகள்? - சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை

**Titele of Book** : *Yaar Thurokikal Sainthamaruthu Ulloorachi Safai* / **Subject** : History / **First Edition :** *15.10.2017* / **Author :** *M.M.M. Noorulhagu- JP Whole Island (Dip.in Mass Media)* / 129, Osman Road, Sainthamaruthu -05 / **Dial :** *077 2612094 , 075 2881162* / **Copy Right :** *Author* / **Published By :** *Uwais Mohamed* / **Type Setting :** *M.I.Sarjoon* / **Cover Design & Layout :** *Nawas Sawfi, 077 6401296* / **Book Size :** *1/8* / **Paper :** *70 GSM* / **Pages :** *40* / **Price :** *Rs 100/=*

**ISBN : 978-955-43179-3-2**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவியியலும், வளங்களும்

அம்பாறை நிர்வாக மாவட்டத்தின் கல்முனை தேர்தல் தொகுதியில் தனி முஸ்லிம் மக்களை மட்டும் கொண்டிருக்கும் ஓர் ஊர்தான் சாய்ந்தமருது ஆகும். இது தென்கிழக்குப் பகுதியில் நீண்டகால வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட ஒரு பழம்பெரும் பிரதேசமாகும். அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்தில் மருதம், நெய்தல் ஆகிய நிலத் திட்டியைக் கொண்டதாக சாய்ந்தமருது அமைந்திருப்பது இவ்வூரின் வளத்தினை எடுத்துக் காட்டுகின்றது.

கடந்த 2016 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின் பிரகாரம் 8,036 குடும்பங்களும், 30,442 மக்கள் சனத்தொகையும் 19,032 வாக்காளர்களும் இங்கு வாழ்ந்து வருகின்றனர். மற்றும் பதினேழு கிராம நிலதாரிப் பிரிவுகளை உள்ளடக்கிய ஒரு பிரதேச செயலகத்தையும் கொண்ட ஒரு தொன்மையான பிரதேசமாகவும் சாய்ந்தமருது காணப்படுகின்றது.

நான்கு இறைநேசச் செல்வர்களின் அடக்கஸ்தலங்களை தாங்கிக் கொண்டிருக்கும் இவ்வூரில் ஐந்து ஜும்மாஆப் பள்ளிவாசல்கள் உட்பட இருபத்துமூன்று (23) பள்ளிவாசல்கள், ஒரு ஹிப்ளு மத்ரஸா, ஒரு அரபுக் கல்லூரி, ஒரு தேசிய (ஸாஹிரா) பாடசாலை உட்பட எட்டு பாடசாலைகள், கோட்டக் கல்வி அலுவலகம், மக்கள் வங்கி, இலங்கை வங்கி, சம்பத் வங்கி கிளைகளும், தனியான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்பனவும் இங்குள்ளன.

ஒரு தபால் நிலையம், மூன்று (03) உப தபால் நிலையங்கள், இரு மாடிகளைக் கொண்ட பொதுச் சந்தைக் கட்டிடம் மற்றும் ஒரு பெண்கள் சந்தை, பாரியளவிலான வர்த்தக நிலையங்கள், ஒரு பொது நூலகம் மேலும் உப நூலகம், மாவட்ட வைத் தியசாலை, ஆயுள்வேத வைத்தியசாலை, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், கமநல சேவைகள் நிலையம்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாணக் காரியாலயம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் பயிற்சி நிலையம், தேசிய நீர்வழங்கள் வடிகாலமைப்புச் சபையின் இயக்கமும் பராமரிப்புக்குமான காரியாலயம், தேசிய நீர்வழங்கள் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய பொறியியலாளர் காரியாலயம், காஸி நீதிமன்றம், கிராமிய தொழிற்பயிற்சி அதிகாரசபையின் தொழிற்பயிற்சி நிலையம், விதாதா வள நிலையம் என்பனவற்றையும் இவ்வூர் கொண்டுள்ளது.

சனசமூக அமைப்புகள், விளையாட்டுக் கழகங்கள், தன்னார்வ அமைப்புக்கள், இலக்கிய அமைப்புக்கள் போன்றவைகளும் உள்ளன. மற்றும் விளையாட்டு மைதானம், மீன்பிடித் துறைமுகம் என்பன அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வூரின் மொத்த நிலப்பரப்பளவு 9 சதுர கிலோமீற்றராகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வூரைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலைக்கப்பட்டுள்ள கல்முனை மாநகரசபையில் நான்கு உறுப்பினர்கள் இருந்தனர். எதிர்காலத்தில் நடைபெற இருக்கும் வட்டார முறையிலான உள்ளூராட்சித் தேர்தலை முன்னிறுத்தி இவ்வூர் ஆறு (06) வட்டாரங்களாக வகுக்கப்பட்டுள்ளன.

**சாய்ந்தமருதின் தற்கால எல்லைகள் பின்வருமாறு காணப்படுகின்றன.**

வடக்கு: கானடி ஒழுங்கை, ஸாஹிரா கல்லூரி வீதி கல்முனைக்குடி (கமு/மஹ்மூத் மகளிர் கல்லூரி அமைந்துள்ள பக்கம்) கல்முனைக்குடி.

தெற்கு : மாளிகா வீதி (கமு/அல்-ஹுஸைன் வித்தியாலயப் பக்கம்) மாளிகைக்காடு.

கிழக்கு: வங்காள விரிகுடா கடல்

மேற்கு: கரைவாகு குடாக் கரை

## தனியான உள்ளூராட்சி மன்றக் கோரிக்கை

கடந்த 1988களிலிருந்து சாய்ந்தமருதுக்கென தனியான உள்ளூராட்சி மன்றம் வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றது. இப்பிரதேச மக்களின் உள்ளூர் அரசியல் அடையாளத்தினை பிரதிபலிப்பதிலும், ஊரின் மேம்பாடுகளை முன்னிறுத்தி செயற்படத் தக்கதுமான இக்கோரிக்கை காலத்திற்குக் காலம் பல பிரமுகர்களால் முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றது. இதில் சமூக ஆர்வலர்கள், சமூகசேவை அமைப்புக்கள், ஜும்மாஆப் பள்ளிவாசல் நிர்வாகசபை என்பன பங்கெடுத்துள்ளன.

சாய்ந்தமருதுக்கென்று உள்ளூராட்சி மன்றம் அமைக்கப்பட வேண்டுமென்று கோருவது ஒரு புதிய வேண்டுகோள் அல்ல. இயலவே இங்கிருந்து வந்த அரசியல் உரிமையின் தொடர்ந்தேர்ச்சியான முன்வைப்பே இதுவாகும். ஏனெனில் "கரைவாகுப்பற்றுக்கு ஆங்கிலேயர் காலத்தில் கிராமசேவகர் பிரிவுகளுக்கு இலக்கமிடப்பட்டபோது சாய்ந்த மருதுக்கு கே.பி. 47 தொடக்கம் கே. பி- 53 வரையான ஏழு குறிச்சிகள் வகுக்கப்பட்டன. இவற்றினை உள்ளடக்கி **1928 இல் 'கரைவாகு தெற்கு கிராமசபை' உருவாக்கப்பட்டு 10 வட்டாரங்களாகவும் வகுக்கப்பட்டு இருந்தன".**

நீண்டகாலமாக சாய்ந்தமருதுக்கென்று தனியான 'கரைவாகு தெற்கு கிராமாட்சி மன்றம்' இயங்கி வந்தது. **இது நமது நாட்டில் 1987இல் கொண்டு வரப்பட்ட பிரதேச சபைகள் சட்டத்தின் பின்பே கல்முனையோடு இணைக்கப்பட்டு, கல்முனை பிரதேச சபையின் எல்லைக்குள்ளானது.** இருந்தாலும் சாய்ந்தமருதுக்கென்று ஒரு தனியான உள்ளூராட்சி சபை உருவாக்கப்பட வேண்டும் என்பது நியாயபூர்வமான கோரிக்கை என்பதை யாரும் மறுக்க முடியாது. ஏனெனில், ஏற்கனவே இருந்த உரிமையை உறுதிப்படுத்தும் கோரிக்கையே தவிர, இது புதிதாக ஒரு பகுதியை பிரித்துக்கோரும் பிரிவினை வாதமல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடாளுமன்றத்தில், தொடர்புச் சாதனங்களில், மேடைப் பிரசாரங்களில் சாய்ந்த மருதுக்குத் தனியான உள்ளூராட்சி மன்றம் வேண்டும் என்பதை வெகுஜனப்படுத்துவதன் ஊடாக மட்டும் இது நடைமுறைக்கு வந்து விடாது. மாறாக இது தொடர்பான உரிய அமைச்சருடன் மிகவும் நெருங்கி இத்தேவையின் அத்தியாவசியத்தை உணர்த்துதல், ஜனாதிபதியின் விருப்பை இது விடயத்தில் பெறுதல் எனும் அம்சத்தை நமது அரசியல் பிரதிநிதிகள் இதய சுத்தியுடன் முன்னெடுக்கும்போதுதான் நமது இந்தக் கோரிக்கை வலுப்பெற்று சாத்தியமாகும் நிலையைப் பெறும்.

அம்பாறை மாவட்டத்தில் நமது சாய்ந்தமருது மொத்த ஊரின் சனத் தொகையை விட குறைந்த பல பிரதேசங்களுக்கு உள்ளூராட்சி மன்றங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதன்படி சாய்ந்தமருது 26,872 மக்கள் சனத்தொகையும், 16,936 வாக்காளர்களையும் கொண்டிருக்கையில், 9,015 மொத்த சனத்தொகையையும் 5,772 வாக்காளர்களையும் கொண்ட லகுகலை, 19,041 மொத்த சனத்தொகையையும் 11,642 வாக்காளர்களையும் கொண்ட காரைதீவு, 21,362 சனத்தொகையையும் 12,648 வாக்காளர்களையும் கொண்ட நாவிதன்வெளி போன்ற பிரதேசங்களுக்குக்கூட பிரதேச சபை வழங்கப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமன்றி 17,965 மக்கள் தொகையையும் 13,389 வாக்காளர்களையும் கொண்ட அம்பாறைக்குக்கூட நகரசபை அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கின்றது (இந்த பந்தியில் காட்டப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் 2008ஆம் ஆண்டுக்குரியதாகும்).

இந்நிலையில் நமது சாய்ந்தமருது பிரதேசத்திற்கென்று த்னியான உள்ளூராட்சி சபை வழங்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கை வெறும் கோஷம் அல்ல. அது உயிரோட்டம் நிறைந்த ஒன்றென்பதை எல்லோரும் புரிந்துகொள்ள முடியும். வீம்புக்காக இது பொருத்தமற்ற கோரிக்கை என கொடி பிடிப்போர் உள்நோக்கம் கொண்டவர்களே தவிர வேறில்லை.

உள்ளூர் அரசியல் அதிகாரத்தினை அடையாளப்படுத்துவதிலும் பிரதேச அபிவிருத் தியிலும், சுத்தப்படுத்துதலிலும் மின்னொளி ஊட்டுவதிலும் பிரதேசத்தின் மேம்பாடுகளை முன்னிறுத்தி செயல்படுவதிலும் உள்ளூராட்சி மன்றங்களின் பணி தனித்துவமானதும் மிக முக்கியமானதுமாகும். அந்த வகையில் உள்ளூர் அதிகார சபையை நோக்கி மக்களின் எதிர்பார்ப்பு குவிந்து கொள்வது இன்றியமையாத ஒரு பக்கமாகும்.

சாய்ந்தமருது பிரதேசத்திற்கென உள்ளூராட்சி சபை ஒன்று வழங்குவது குறித்து இன்றைய கல்முனை மாநகரசபை எல்லையுள் அமைந்திருக்கும் **எந்தப் பிரதேசத்தவரும் பகிரங்கமாகவும் நேரடியாகவும் மறுத்துரைக்காமல் இருப் பதுவே அதன் தேவையையும் நியாயத்தையும் உறுதிப்படுத்தப் போதுமானது.**

## சட்டம் என்ன சொல்கிறது?

நமது சாய்ந்தமருது பிரதேசம் தற்போது கல்முனை மாநகர சபையின் ஆள்புல எல்லைக்குள் இருப்பதினால் அதிலிருந்து பிரித்தெடுத்து உள்ளூராட்சி மன்றத்தினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவுவதில் சட்டப் பிரச்சினை இருப்பதாகச் சில அரசியல்வாதிகள் உட்படச் சிலர் கூறிவருகின்றனர். இவர்களது கூற்றுக்கு முன்வைக்கப்படும் சட்ட ஏற்பாடு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமாகும். இதில் 'பிரதேச சபையை அமைத்தல்' என்பதில் 2(1) பின்வருமாறு எடுத்துக் காட்டுகின்றது.

2(1) : "மக்கள், உள்ளூராட்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளில் பயனுறும் வகையில் பங்குபற்றுவதனை இயலச் செய்யும் கருத்துடன், அமைச்சர், கசெட்டில் வெளியிடப்படும் கட்டளை மூலம், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஏதேனும் இடப்பரப்பினை பிரதேசசபை இடப்பரப்பு ஒன்றாக வெளிப்படுத்தலாம் என்பதுடன் அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்பின் நிருவாக எல்லைகளை வரையறுத்தலும் வேண்டும். அவ்வாறு வெளிப்படுத்தப்படும் பிரதேச சபை ஒவ்வொன்றினதும் நிருவாக எல்லை களானவை, இயலுமானவரையில், உதவி அரசாங்க அதிபர் பிரிவின் (இப்போது பிரதேச செயலகம் என இது அழைக்கப்படுகின்றது) எல்லைகளுக்குள் அடங்குப வையான மாநகர சபைப் பிரதேசத்தில் அல்லது நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பொருளுக்குட்பட்ட ஒரு பட்டினத்தில் அடங்கியிருப்பதான எவையேனும் இடப்பரப் புக்கள் நீங்கலாக உதவி அரசாங்க அதிபர் பிரிவொன்றின் எல்லைகளுக்கு நேரொத்தனவாக இருத்தல் வேண்டும். அமைச்சரானவர், அதே கட்டளை மூலம் அல்லது பின்னரான கட்டளை ஒன்றின் மூலம் அத்தகைய பிரதேச சபை இடப்பரப்புக்கு பிரதேச சபை ஒன்றினை அமைக்கலாம் என்பதுடன் அத்தகைய சபைக்குப் பெயர் ஒன்றினையும் குறித்தொதுக்கலாம்".

இச்சட்டமானது பொதுவாக ஒரு பிரதேச சபையினை உருவாக்குவதற்கானது பற்றிப் பேசுகின்றதே தவிர, மாநகர சபையின் ஆள்புல எல்லைக்குள் உள்ள பகுதிகளை பிரித்தெடுத்து, புதிதாக உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்குவது பற்றி அல்ல. இது தொடர்பில் மாநகர சபைகள் சட்டத்தில்தான் இதற்கான சட்ட ஏற்பாட்டை தேட வேண்டும். அதுதான் முறையானதும் கூட. அப்படித் தேடும்போது பின்வரும் முடிவுகளை பெறக்கூடியதாக இருக்கின்றன. இதில் நான்காவது இடம்பெறும் (D) விதி சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றத்தினை நிறுவுவதற்கு முற்று முழுதான சாதகத்தைக் கொண்டிருக் கின்றது என்பது நமது கவனங்களுக்குரியவை.

"உள்ளூராட்சி அமைச்சர் எந்த நேரத்திலும் கீழ் காணும் நோக்கங்களுக்காக ஒரு கட்டளையை பிறப்பித்து அதனை வர்த்தமானியில் பிரசுரிக்க முடியும்".

(A) ஒரு மாநகர சபையின் எல்லைகளை மாற்றுதல் அல்லது ஒரு மாநகர சபையில் உள்ள வட்டாரத்தின் எல்லைகளை மாற்றுதல்.

(B) ஒரு மாநகர சபையின் அங்கத்தவர்களின் எண்ணிக்கைகளை மாற்றுதல்.

(C) புதியதொரு மாநகர சபையை உருவாக்கும் நோக்கில் நடைமுறையில் இருக்கும் ஒரு மாநகர சபையைக் கலைத்தல் மற்றும் நடைமுறையில் இருக்கும் மாநகர சபையைத் திருத்துவதன் மூலம் புதியதொரு மாநகர சபையை உருவாக்குதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(D) வேறு ஒரு விதமான உள்ளூராட்சி அமைப்பினை அவ்விடத்தில் அமைத்தல்.**

*இது 1947ஆம் ஆண்டின் மாநகர சபைச்சட்டம் 29இல் 284 ஆம் சரத்திற்கான 1977 ஆம் ஆண்டின் 24 வது சட்டத் திருத்தத்தில் காணப்படுகின்றது.*

## இலகு வழியும் உண்டு?

**சாய்ந்தமருதிற்கென தனியான உள்ளூராட்சி மன்றத்தினை நிறுவுவதில் எந்த விதமான சட்ட சிக்கல்களும் இல்லை. அப்படி இருப்பதாக கூறும் யாராக இருந்தாலும் அது அவர்களின் தனிப்பட்ட நலன்கள் சார்ந்த திட்டத்தில் இருந்து முன்வைப்பதாகவே நாம் நம்புவதற்கு இதனை விட வேறு என்ன ஆதாரம் வேண்டும்?**

சாய்ந்தமருது பிரதேச செயலக ஆள்புல எல்லையை கல்முனை மாநகர சபையின் ஆள்புல எல்லையிலிருந்து பிரித்தெடுப்பதற்கு இலகுவாகவே அதன் எல்லைகள் அமைந்திருக்கின்றன. அதுமட்டுமன்றி சாய்ந்தமருதுக்கு தனியான உள்ளூராட்சி மன்றம் கோருவது என்பது நமது ஊரின் அடிப்படை உரிமையாகும். உள்ளூராட்சி மன்றம் ஒன்றினைப் பெறுவதன் ஊடாக நம்மை அண்மித்துள்ள எந்த பிரதேசங்களுக்கும், அம்மக்களுக்கும் எந்தவிதமான ஊறுகளையும் விளைவிக்கவில்லை என்பதையும் தெளிவாக நாம் உணர்ந்து கொள்வதோடு, அடுத்தவர்களுக்கும் தெளிவுபடுத்தலாம்.

**ஓர் உள்ளூராட்சி சபையை நிறுவுகின்ற விடயத்தில் உள்ளூராட்சி மன்ற சட்டத்தின் அடிப்படையிலும் இதுகாலவரை நடைமுறையிலிருந்து வருகின்ற நடப்பியல் அரசியல் நோக்கிலும் குறித்த உள்ளூராட்சி அமைச்சருக்கான அதிகாரமாகவே இருந்து வந்திருக்கின்றன. அந்த அடிப்படையில் இது ஒரு அமைச்சரவை பத்திரத்தின் ஊடாகவும் மற்றும் அதற்கென்று நிறுவப்படுகின்ற ஆணைக்குழுவின் அடிப்படையிலும் நிறைவேற்றித்தான் தரப்படவேண்டு மென்பது கட்டாயமானதல்ல என்பதை நமது நாட்டில் உருவாக்கப்பட்ட பல உள்ளூராட்சி மன்றங்கள் தாபிக்கப்பட்ட கோணங்களிலிருந்து உணரத் தக்கதாகும்.**

இவ்வாறு உருவாக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு உதாரணங்களாக அம்பாறை மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட கல்முனை பிரதேச சபை நகர சபையாகவும் பின்னர் மாநகர சபையாகவம் தரமுயர்த்தப்பட்டமை, காரைதீவு மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச சபைகள் உருவாக்கியமை, அக்கரைப்பற்று – கருங்கொடித்தீவு பிரதேச சபை என இருந்த பிரதேச சபை பிரிக்கப்பட்டு ஒரு மாநகர சபையும், இன்னுமொரு பிரதேச சபையுமாக மொத்தம் இரண்டு சபைகளாகப் பிரிக்கப்பட்டமை போன்ற பல்வேறு உதாரணச் சான்றுகளை காணக்கூடியதாகவும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது நாட்டில் அண்மையில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான எல்லை நிர்ணய ஆணைக்குழு என்பது மஹிந்த ராஜபக்ஷவின் கடந்த அரசாங்கத்தின்போதே எல்லைகளை வகுத்து அவரிடம் கையளிக்கப்பட்ட ஒன்றாகும். அவற்றில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதாக அங்குமிங்குமாக சில குரல்கள் ஒலித்த போதிலும் அது வலிமைப்பட்டு மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு முடியாத கையறு நிலையில் அன்று இருந்தது என்பது இது விடயத்தில் ஒரு வெளிப்படையான அம்சமாகும்.

என்றாலும் 2015இல் இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலை அடுத்து அமைக்கப்பட்ட நூறு நாள் வேலைத்திட்ட அரசாங்கத்தின்போதும் அதன் பின்னர் பொதுத்தேர்தலை அடுத்து உருவாக்கப்பட்ட இன்றைய நல்லாட்சி அரசாங்கத்திலும் தொடர்ந்தும் இந்த விடயம் முன்வைக்கப்பட்டதினால் மீளாய்வு செய்வதற்கென்று உள்ளூராட்சி எல்லை நிர்ணய ஆணைக்குழுவினை நிறுவியும், அதன் காலத்தை ஓரிரு தடவை அரசாங்கம் நீட்டிக் கொடுத்துமிருந்தன.

அது இன்று முடிவுறுத்தப்பட்டிருந்தாலும் அதற்கு முன்னர் இந்த மீள் நிர்ணய ஆணைக்குழுவின் இறுதிப்படுத்துதல் பூரணமாகாத நிலையில் புதிதாக எந்தவொரு உள்ளூராட்சி மன்றத்தையும் நிறுவ முடியாது என்ற போலியான காரணத்தைச் சொல்லி சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றத்தை வழங்குவதிலிருந்து நமது அரசியல் பிரதிநிதிகள் காலத்தை விரயமாக்கியிருந்தனர்.

எது எவ்வாறிருந்தாலும் ஒரு புதிய உள்ளூராட்சி சபையை நிறுவுவதற்கு உத்தேசிக் கப்படும் எல்லா இடங்களிலும் எல்லை நிர்ணய தேவை சம்பந்தப்பட்டிருப்ப தில்லை. அவ்வாறு எல்லை பிரிப்பை எதிர்கொண்டுள்ள பிரதேசங்களில் எல்லை நிர்ணய தொழிற்பாடு முடிவுற்றதன் பின்னரே அங்கு ஒரு புதிய உள்ளூராட்சி சபையினை நிறுவ முடியும். **இத்தகைய நிலைப்பாடு காணப்படாத இடங்களில் உள்ளூராட்சி சபையை நிறுவுவதில் சட்டச் சிக்கலோ, நடைமுறைப் பிறழ்வோ தடைக் காரணங்களாக அமைய முடியாது.**

இந்த வகையில்தான் அண்மையில் 1998/02ஆம் இலக்கம் 2016ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம், திகதி திங்கட்கிழமை வெளிவந்த இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகை அதி விசேஷமானதில், "தம்மன்கடுவ பிரதேச சபையை கலைத்து அதற்குள் அடங்கியிருந்த எல்லைகளின் சில பகுதியை பொலன்னறுவை மாநகர சபை என்றும், ஏனைய பகுதிகளை பொலன்னறுவை பிரதேச சபை என்ற வகையில் இரு சபைகளை அமைத்து எதிர்வரும் 2017.06.30 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் வண்ணம் கலைக்கப்படுவதாக" அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மேலே சுட்டிக்காட்டிய நிகழ்வானது சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை நிறுவுவதை காலதாமதப்படுத்தாது விரைவுபடுத்தி செய்து தந்திருக்கக்கூடியது என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் வலிமைப்படுத்துகின்றது. ஏனென்றால், தற்போதைய கல்முனை மாநகர சபையின் எல்லையினுள் வகுக்கப்பட்டிருக்கின்ற வட்டாரங்களில் குறிப்பாக சாய்ந் தமருது பிரதேச செயலக எல்லைக்குள் வேறெந்த ஊர்களும் இணைக்கப்படாது தனியாக வகுக்கப்பட்டுள்ளது.

இதன்படி நோக்குகையில் சாய்ந்தமருது உள்ளூராட்சி சபைக்கான வட்டாரங்களை வகுப்பதில், எந்த சிக்கலும் இல்லை. அதுமட்டுமன்றி அங்கு ஏலவே சாய்ந்தமருது பிரதேச செயலகம் அமைந்திருப்பதினால் அதற்கென்று திட்டவட்டமான எல்லைகளும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. இவை சாய்ந்தமருதுக்கென உள்ளூராட்சி சபை வழங்குவதில் எந்தத் தடையையும் கொண்டிருக்கவில்லை என்பதை மிகத் தெளிவாக சுட்டிக்காட்டக் கூடியதாகும்.

## புள்ளிவிபர ரீதியான ஒப்பீட்டு ஆய்வு.

### கல்முனை மாநகர சபை
### இனரீதியாக சனத்தொகையும் வாக்காளர் தொகையும் - 2016

| பிரதேச செயலகப் பிரிவு | சனத்தொகை | | வாக்காளர்தொகை | |
|---|---|---|---|---|
| | முஸ்லிம்கள் | தமிழர்கள் | முஸ்லிம்கள் | தமிழர்கள் |
| கல்முனை | 50,557 | - | 30, 888 | - |
| கல்முனை (தமிழ் பிரிவு) | 585 | 36,416 | - | 21,012 |
| சாய்ந்தமருது | 30,442 | - | 19,032 | - |
| மொத்தம் | 81,584 | 36,416 | 49, 920 | 21,012 |

முன்னர் இருந்த கல்முனைப் பட்டினசபை எல்லையினுள் இன்று வாழும் முஸ்லிம் மக்களின் சனத்தொகை 2016ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின் பிரகாரம் 28,443 பேரும் 16,351 வாக்காளர்களும் உள்ளனர். அதேநேரம் இந்த எல்லையினுள் தமிழ் மக்கள் 10,538 பேரும் 6,452 வாக்காளர்களுமே உள்ளனர் என்பதும் நோக்கத்தக்கது.

**இன்றைய கல்முனை மாநகர சபையினுள் சாய்ந்தமருது தவிர்ந்த ஏனைய முஸ்லிம் பிரதேசங்களில் மொத்தமாக முஸ்லிம் சனத்தொகை 2016ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின் பிரகாரம் 50,557 பேரும் 30, 888 வாக்காளர்களும் இருப்புக் கொண்டுள்ளனர். அதேநேரத்தில் கல்முனை மாநகர சபை எல்லையினுள் வாழ்கின்ற மொத்த தமிழ் மக்களின் சனத்தொகை 36,416 வாக்களார்களின் தொகை 21,012 ஆகும். சாய்ந்தமருது தனியாகப் பிரிந்து கொள்வதினால் கல்முனை மாநகர சபை அரசியல் அதிகாரம் முஸ்லிம்களிடம் இருந்து பறிபோய்விடும் என்பதில் எவ்விதமான உண்மைகளுமில்லை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்முனை மாநகர சபை வட்டாரப் பிரிப்பு

**மொத்த உறுப்பினர்கள் 24 +16 = 40**

| வட்டாரம் பிரதேசங்கள் | முஸ்லிம் உறுப்பினர்கள் | தமிழ் உறுப்பினர்கள் | மொத்த உறுப்பினர்கள் |
|---|---|---|---|
| பெரிய நீலாவணை | 01 | 01 | 02 |
| மருதமுனை | 03 | - | 03 |
| பாண்டிருப்பு | - | 02 | 02 |
| சேனைக்குடியிருப்பு | - | 01 | 01 |
| நட்பிட்டிமுனை | 01 | 01 | 02 |
| கல்முனை, | - | 01 | 01 |
| இஸ்லாமபாத் | 01 | 01 | 02 |
| கல்முனைக்குடி | 05 | - | 05 |
| சாய்ந்தமருது | 06 | - | 06 |
| **மொத்தம்** | **17** | **07** | **24** |

கல்முனை மாநகர சபைக்கு தனி உறுப்பினர் வட்டாரங்களில் இருந்து இருபத்துஇரண்டு (22) உறுப்பினர்களும், பல உறுப்பினர் வட்டாரம் ஒன்றிலிருந்து இருவருமாக (02) மொத்தம் இருபத்துநான்கு (24) உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இது உள்ளூராட்சியின் அறுபது வீத (60%) வட்டார முறை உறுப்பினர்களாகும். அத்துடன் உள்ளூராட்சி மன்றத்தின் விகிதாசார அடிப்படையில் நாற்பது வீத (40%) முறைமையின்படி பதினாறு (16) உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். இதனடிப் படையில் கல்முனை மாநகர சபைக்கு கூட்டு மொத்தமாக (24+16) நாற்பது (40) உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

## கல்முனை மாநகர சபையை தமிழர்கள் கைப்பற்ற முடியுமா?

விகிதாசார ரீதியாக வருகின்ற ஆசனங்களின் அடிப்படையில் முஸ்லிம் பிரதிநிதிகளை மேவி தமிழர்களின் பிரதிநிதித்துவம் எந்த வகையிலும் கல்முனை மாநகர சபையில் மேலோங்க முடியாது. **அதேபோன்று இன்றைய வட்டார அடிப்படையில் கல்முனை மாநகர சபையின் சாய்ந்தமருது நீங்கலாக பதினெட்டு (18) உறுப்பினர்கள் தெரிவாகும் வகையில் வகுக்கப்பட்டு உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. இதில், முஸ்லிம்கள் பதினொரு (11) உறுப்பினர்களும் தமிழர்கள் ஏழு (07) உறுப்பினர்களும் தெரிவாகும் வகையில் வட்டாரங்கள் வகுக்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.**

மற்றும் இதில் ஈண்டு குறிப்பிடத்தக்கது என்னவென்றால் **முன்னர் கல்முனைப் பட்டின சபையாக இருந்த எல்லைக்குள் தமிழர்கள் இரண்டு உறுப்பினர்களும், ஆறு முஸ்லிம் உறுப்பினர்களும் தெரிவாகும் வகையில் வட்டாரங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆயின் விகிதாசாரத்திலும் சரி, வட்டார அடிப்படை யிலும் சரி முஸ்லிம்களை (சாய்ந்தமருது நீங்கலாக) தமிழர்கள் மிஞ்சிவிட முடியாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனடிப்படையில் நோக்குவோமேயானால் தமிழ் உறுப்பினர்கள் ஏழு (07) தெரிவாகும் வகையில் வட்டாரங்கள் பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளன. பெரிய நீலாவணையில் - ஒன்று (01), பாண்டிருப்பில் - இரண்டு (02), கல்முனையில் - (02), நட்பிட்டிமுனையில் - (01), மற்றும் சேனைக்குடியிருப்பில் - (01) என்ற அடிப்படையிலாகும்.

முஸ்லிம் உறுப்பினர்கள் பதினொன்று (11) தெரிவாகும் வகையில் வட்டாரங்கள் பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளன. பெரிய நீலாவணையில் - ஒன்று (01), மருதமுனையில் - மூன்று (03), நட்பிட்டிமுனையில் - ஒன்று (01), கல்முனைக்குடி – ஐந்து (05) மற்றும் இஸ்லாமபாத் - ஒன்று (01) என்ற அடிப்படையில் உறுப்பினர்கள் தெரிவாகும் வகையில் வட்டாரங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

## சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றமும் றவூப் ஹக்கீமின் நகர்வுகளும்

சாய்ந்தமருது மக்களின் உள்ளூராட்சி மன்றக் கோரிக்கையானது அம்மக்களைப் பொறுத்தவரை ஒரு முக்கியமான போராட்டமாகவே இருந்து வருகின்றது. இதனை தங்களது அரசியல் கட்சிகளைப் பலப்படுத்துவதற்கு உபயோகித்துக் கொள்ளுகின்ற ஒரு போக்கையே கடைப்பிடித்து வருகின்றனர். இதனை எவ்வாறு முஸ்லிம் அரசியல் களத்தில் இருந்து வருகின்ற முஸ்லிம் கட்சிகளும் முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகளும் கையாண்டு வருகின்றனர் என்பதனை இவ்விடத்தில் நோக்குவது பொருத்தமானது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோற்றக் காலத்திலிருந்து இன்றுவரை அளிக்கின்ற வாக்குகளில் தொன்னூறு வீதமான வாக்குகளை மு.காவுக்கு அளித்து அக்கட்சியின் அசைக்க முடியாத ஒரு கோட்டையாக விளங்கி வருவது சாய்ந்தமருதூராகும். அந்த மக்களின் உரிமை உணர்வில் எவ்வாறெல்லாம் கபடத்தனங்களை பிரயோகித்து வந்திருக்கின்றனர் என்பதை (குறிப்பாக சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கை விடயத்தில் என்பதை) முதலில் பார்ப்போம்.

**றஊப் ஹக்கீம் மு.காவின் தலைவராவதற்கு முன்னர் (1999இல்) நமது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கையை ஆதரித்துக்கொண்டாலும் அவர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரானதற்குப் பின்னர் இதற்கு மாறாகவே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார். இதனை அவரது தலை மைத்துவ கதிரைக்கு வந்ததிலிருந்து இன்றுவரையான பல நடவடிக்கைகள் நமக்கு காண்பித்து, நிரூபித்துக்கொண்டே இருக்கின்றன.**

சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கை நியாயமானது என முன்னர் நாடாளுமன்றத்தில் உரைத்த றஊப் ஹக்கீம் இது விடயத்தில் அக்கறை காட்டவில்லை. அவர் நினைத்திருந்தால் அவர் கட்சி சார்ந்த அமைச்சர் பஷீர் சேகுதாவூத் மாகாண சபைகள் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சராக இருந்த காலத்தைப் பயன்படுத்தி சாத்தியப்படுத்தித் தந்திருக்க முடியும். இதனைத் தவிர்த்திருப்பதே இக்கோரிக்கையில் அவருக்குள்ள பின்வாங்கலை கோடிட்டுக் காட்டப் போதுமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 2005இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போதுகூட சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கையை நையாண்டி செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி மன்றக் கோரிக்கை மும்முரமாக முன்வைக்கப்பட்ட காலங்களில் மிகவும் மௌனமாகவும் அதில் இருந்து விலகி இருக்கும் போக்கையே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடைப்பிடித்து வந்திருக்கிறது. இதனை கட்டுடைப்பு செய்து கோரிக்கையுடன் இணங்கி செயல்படும் நிலைப்பாட்டுக்கு கடந்த 2015ஆம் ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியில் திரும்பி இருந்தது.

இந்தச் சார்புச் சிந்தனையின்பால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாறும் சூழலுக்கு வந்ததற்கு சாய்ந்தமருது ஜும்மாஆப் பள்ளிவாசல் உள்ளூராட்சி மன்றக்கோரிக்கை யினைக் கையிலெடுத்தது ஒரு முக்கிய காரணமாக அமைந்திருந்தமை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒன்றாகும்.

**எது எவ்வாறு இருந்த போதிலும் கடந்த 2015.04.05ஆம் திகதி சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போது 'சாய்ந்தமருது மக்களின் தேவை தனியான நகரசபை என்றால் அதனை பெற்றுத்தருவதற்கு தயக்கம் காட்டமாட்டோம்" எனக் குறிப்பிட்டிருந்தார்.**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரின் இந்த கூற்று இவ்வூர் மக்களிடையேயும் ஜும்மாஆப் பள்ளி நிர்வாகத்தினரிடையேயும் அதிகரித்த நம்பிக்கையையும் எதிர்பார்ப்புக்களையும் கூட்டியது என்றே கூற வேண்டும். இதனை அடுத்து ஜும்மாஆப் பள்ளிவாசல் சார்ந்த குழுவினர் 10.04.2015 இல் அமைச்சர் றஊப் ஹக்கீமை சந்தித்து சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி சபையை வலியுறுத்தினர்.

இக்கோரிக்கையை ஏற்றுகொண்ட அமைச்சர் றவூப் ஹக்கீம், சாய்ந்தமருது ஜும்மாஆப் பள்ளிவாசல் சார்ந்த குழுவினரை 22.04.2015இல் அழைத்துச் சென்று பொதுநிர்வாக உள்ளூராட்சி மாகாண அமைச்சர் கருஜெயசூரியவை சந்தித்து இது குறித்து கலந்துரையாடினார்கள்.

அமைச்சர் கருஜெயசூரிய, அமைச்சின் செயலாளர் ஆகியோர் இக்கோரிக்கைக்கு சாதகமாக பதிலளித்ததுடன், கையளித்துள்ள ஆவணங்களுடன் பின்வரும் மூன்று ஆவணங்கள் அவசியமானது என தெரிவித்தனர். 1. கோரிக்கை பத்திரம் பிரதேச செயலாளரின் சிபாரிசுடன் அம்பாறை மாட்ட அரச அதிபரூடாக சமர்பிக்குமாறும் 2. கல்முனை மாநகர சபையின் சம்மதக்கடிதம் 3. கிழக்கு மாகாண சபை முதலமைச்சரின் சம்மதக்கடிதம்.

**இதில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஏ.எல்.எம் சலீமின் சிபாரிசுடன் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரின் சிபாரிசுடன் கூடிய கடிதம் கருஜெயசூரியா அமைச்சரா கவிருந்த காலத்தில் கையளிக்கப்பட்டுள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏனைய இரண்டு கடிதங்களும் அமைச்சர் கருஜெயசூரியாவின் பதவிக் காலம்வரை உள்ளூராட்சி மாகாண அமைச்சுக்கு சேர்ப்பிக்கப்படவில்லை. இதில் கிழக்கு மாகாண முதலமைச்சரின் கடிதத்தினை இன்றைய பிரதி அமைச்சர் எச்.எம்.எம் ஹரீஸ் பெற்றுத்தருவதாகவும் மாநகர சபை கடிதத் தினை சாய்ந்தமருதைச் சேர்ந்த கல்முனை மாநகரசபை உறுப்பினர்கள் நான்கு பேரும் பெற்றுகொள்வது என்றும் முடிவாகி இருந்தும் அது நடை பெறவில்லை.**

அதேநேரம் சாய்ந்தமருது ஜும்மாஆப் பள்ளிவாசல் குழு மீண்டும் அமைச்சர் றஊப் ஹக்கீமை 01.05.2015இல் சந்தித்து மேற்படி இரண்டு சம்மதக்கடிதம் பெறும் நடவடிக்கை மந்தகதியில் இருப்பதை சுட்டிக்காட்டினர். இதன்போது அமைச்சர் ரவூப் ஹக்கீம் கல்முனை மாநகர சபை சம்மதக்கடிதத்தினை தான் பெற்றுத்தருவதாக வாக்குறுதி அளித்தார். ஆயினும் அது கூட அன்று நிறைவேற்றப்படவில்லை.

## தேர்தல் பேய்க்காட்டல்

இவ்வாறான முன்னெடுப்புக்கள் நடந்துகொண்டிருக்கும்போது 2015இல் பொதுத்தேர்தல் பிரகடனம் செய்யப்பட்டது. இதனாலும் சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை கோரிக்கை பின்தள்ளப்பட்டது. ஆயினும் இது குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அவர்கள் கூட்டிணைந்து போட்டியிட்ட ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்ரமசிங்க ஊடாகவும் இச்சபையை ஏற்படுத்தி தருவதென்கின்ற உறுதிமொழி மீண்டும் பகிரங்கமாக தேர்தல் மேடைகளில் பிரகடனம் செய்யப்பட்டது.

07.08.2015இல் வாழைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட எழுச்சி மாநாடு நடைபெற்றது. அதில் சில பிரகடனங்கள் முன்மொழியப்பட்டன. அதில் ஒன்று பின்வருமாறு காணப்படுகின்றது.
**'சாய்ந்தமருது பிரதேசத்துக்கான தனியான நகரசபையை தேர்தலைத் தொடர்ந்து பிரகடனப்படுத்துவோம்"**

09.08.2015இல் கல்முனை சந்தாங்கேணி மைதானத்தில் நடைபெற்ற பொதுத்தேர்தல் பிரசார கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் உரையின் ஓரிடத்தில் 'றஊப் ஹக்கீமும் கரு ஜெயசூரியவும் பேசி எடுத்துள்ள முடிவுக்கு அமைய சாய்ந்தமருது மக்களின் நீண்டகால கோரிக்கையாக உள்ள சாய்ந்தமருதுக்கான பிரதேச சபையை ஏற்படுத்துவோம்' எனக் குறிப்பிட்டார்.

ஆகவே தேர்தல் வெற்றியின் பின்புலத்தில் இக்கோரிக்கை அதிக செல்வாக்கு செலுத்தியது மட்டுமன்றி, இக்கட்சியை ஆதரித்து வாக்களித்தோர் இது குறித்தும் தமது ஆதரவுக் கரத்தை நீட்டியிருப்பதாகவும் அர்த்தம் கொள்ள முடியும்.

கடந்த 17.08.2015இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கல்முனைத் தொகுதியில் ஐக்கிய தேசிய கட்சி 24,992 வாக்குகளையும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 8,549 வாக்குகளையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 726 வாக்குகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று இருந்தன. இதில் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் சேர்ந்து தேசிய காங்கிரஸ் கட்சியும் போட்டியிட்டு இருந்தன. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டிருந்தது.

இந்த பொதுத்தேர்தலில் தமது கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபானம் என்றில்லாது விட்டாலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தமது எதிர்கால நடவடிக்கைகள் என உறுதியளித்தவற்றில் சாய்ந்தமருதுக்கென தனியான உள்ளூராட்சி சபையினை பெற்றுத்தருவதாகவும் வாக்குறுதிகள் அளித்திருந்தன. அதேநேரம் தேசிய காங்கிரஸின் தலைவர் அமைச்சர் அதாவுல்லாஹ் கல்முனை மாநகர சபையில் இருந்து மூன்று (3) புதிய உள்ளூராட்சி சபைகளை பிரகடனம் செய்வது தொடர்பில் பரப்புரை செய்திருந்தார்.

தேர்தலின் வெற்றி தோல்விக்கு சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை விடயம் முழுமையான பொறுப்பு இல்லாவிட்டாலும் அதில் குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்திருப்பதை யாரும் மறுத்துவிட முடியாது. அந்தவகையில் தேசிய காங்கிரஸ் முன்வைத்த மூன்று (3) புதிய உள்ளூராட்சி சபைகள் என்பதை கல்முனை தொகுதி மக்கள் முற்றாக நிராகரித்து விட்டனர் என்பதற்கு அக்கட்சி பெற்ற வாக்குகளை ஆதாரமாக கொள்ள முடியும். கல்முனைத் தொகுதிதான் கல்முனை மாநகரசபையின் ஆள்புலம் என்பதும் கவனிக்கத்தக்கது.

## அதாவுல்லாஹ்வின் சாமர்த்தியம்

**எது எவ்வாறு இருந்தாலும் தேசிய காங்கிரஸ் தலைவர் முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவினாலும் அவரது கட்சி சார்ந்த அதிகாரமுடைய உறுப்பினர் களாலும் சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை பற்றிப் பேசுவதற்கு எந்தவித அருகதையும் இல்லை என்பது மிகவும் வெளிப்படையானது.**

உண்மையில் சாய்ந்தமருது உள்ளூராட்சி சபையை ஒரு பிரிப்பாகவும் துண்டாடலாகவும் எண்ணுமளவுக்கு அமைச்சர் அதவுல்லாவின் மூன்று (3) சபை கதையாடல் உருமாற்றி வைத்தது. நியாயபூர்வமாகவும் நிதானமாகவும் சிந்திக்க முன்வருவோர்களிடம்கூட இது பாரிய அச்சுறுத்தல் பாங்கை பெற்றிருந்ததும் நமக்கு மறைவானதல்ல.

இவ்வாறான நெருக்கடி நிலைக்கு சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை கோரிக்கையினை மலினப்படுதிவிட்ட தேசிய காங்கிரஸ்காரர்கள் இன்று சாய்ந்தமருது உள்ளூராட்சி சபையைப் பற்றிப்பேச தொடங்கி இருப்பதும் அறிக்கைவிட துணிந்திருப்பதும் அவர்களது கபடத்தனத்தின் உச்சகட்டம் என்றுதான் வர்ணிக்க வேண்டியுள்ளது. அல்லது 'ஆடு நனைகிறது என ஓநாய் அழுத" கதையைத்தான் இது நமக்கு இன்று ஞாபகப்படுத்தி வைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேநேரம் கல்முனைத் தொகுதியிலிருந்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸிக்கு அளித்த வாக்குகளையும் சாய்ந்தமருது உள்ளூராட்சி சபையை ஏற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக அளித்ததாகவும் நோக்க முடியும். **அதேபோன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள், ஐக்கிய தேசிய கட்சி முஸ்லிம் ஆதரவாளர்கள் கல்முனைத் தொகுதியில் அளித்திருக்கும் வாக்குகளும் சாய்ந்தமருது உள்ளூராட்சி சபையினை நிறுவுவதற்கு தமது ஒப்புதலை வழங்கி இருப்பதாக எடுத்துக்கொள்ள முடியும்.** ஏனெனில் அமைச்சர்களான றஊப் ஹக்கீம், கருஜெயசூரிய ஆகியோர் இணக்கம் கண்டிருந்த இந்த விடயத்தை ஏற்படுத்தித் தருவோம் என்று பிரதமர் ரணில் குறிப்பிட்டிருப்பதினாலும் இவ்வாறு கணிப்பதில் தவறில்லை.

அமைச்சர் றஊப் ஹக்கீம் கடந்த 01.10.2015இல் தற்போதைய உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபாவை சந்தித்து சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை தொடர்பில் பேசியதுடன், இக்கோரிக்கையில் தனது வேண்டுகோள் கடிதத்தினையும் கையளித்துள்ளார். இதன்போது சாய்தமருதுக்கு உள்ளூராட்சி சபை தருவதற்கு அமைச்சர் இணக்கம் தெரிவித்ததாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தரப்பினரால் வெளிப்படுத்தப்பட்டது.

**ஆகவே, நூறு நாள் நல்லாட்சியில் பெற்றுக்கொள்ள வேண்டிய சாய்ந்தமருது உள்ளூராட்சி சபையை ஏறத்தாள 200 நாட்கள் நீடித்திருந்த ஆட்சியில் கோட்டை விட்டது போன்று இன்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் நல்லாட்சிக்குரிய தேசிய அரசாங்கத்திலும் இக்கோரிக்கை மழுங்கடிக்கப்பட்டுவிடக்கூடாது.** இதற்கு இன்னும் இன்னும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் காரணமாகி விடுவதில் இருந்தும் விலகி இருக்க வேண்டும்.

வட்டார முறைமையில் தேர்தல் நடைபெறுவதற்காக வகுக்கப்பட்ட எல்லைகள் மீளாய்வுப் பணி நடைபெறுவதினால் சில மாற்றம் எல்லைகளில் நிகழலாம் என எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தைக் காரணம் காட்டி சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி சபையை பிரகடனப்படுத்துவதை பின் தள்ளுகின்றோம் என்று மு.காவினர் புழுகு முட்டையை அவிழ்த்து விட்டனர்.

**உண்மையில் வட்டார முறைமையை முன்னிறுத்தி எமது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கையை பின்னகர்த்த வேண்டியதில்லை. ஏனெனில் வட்டார வகுப்பு தேர்தலுடன் தொடர்புபட்டதே தவிர ஒரு உள்ளூராட்சி சபையினை பிரகடனப் படுத்துவதுடன் தொடர்புபட்டதல்ல. அது மட்டுமன்றி நமது சாய்ந்தமருதின் எல்லைகளும் வட்டாரங்களும் தெளிவாக பிரிக்கப்பட்டுமுள்ளன.**

**இப்படிப் பொருத்தமற்ற கதைகளைக் கூறி காலதாமதங்களுக்கு போலிக் காரணங்களின் பின்னாலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நின்றிருக்கக் கூடாது. அது நின்றது என்பதை நாம் உறுதியாகக் கூறுவதற்கு பலமான**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரு காரணம் எம்மிடம் இருக்கின்றது. அது கடந்த 31 டிசம்பர் 2015 வரை நீடிக்கப்பட்டிருந்த கல்முனை மாநகர சபையின் கலைதலுக்கு முன்னர் அதன் சம்மதக் கடிதத்தையும், கிழக்கு மாகாணசபை முதலமைச்சரின் இணக்கக் கடிதத்தையும் அமைச்சர் ரஊப் ஹக்கீம் முன்னின்று உடன் பெற்று, இன்றைய உள்ளூராட்சி மாகாண சபை அமைச்சரிடம் கையளித்து ஆவணங்களைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.**

இதனைத் தவிர்த்திருப்பதே அவரது அசிரத்தையையும் கபடத் தனத்தையும் காட்டுகின்றது. இதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் காட்டும் தயக்கம்தான் அவர்களை சந்தேகிக்க வைப்பதும், சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை கேள்விக்கு உட்படுத்தப் படுவதாகவும் அமைகின்றது.

இவை ஒருபுறமிருக்க இறுதியாக சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை ஒன்று நிறுவுவதில் ஏற்பட்டு வரும் காலதாமதத்திற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தரப்பிலிருந்து முன்வைக்கப்பட்டு வந்த பிரதான காரணம் "உள்ளூராட்சி சபைகளுக்கான எல்லை நிர்ணய ஏற்பாடுகள் பூரணத்துவம் அடையாத நிலையே அன்றி வேறெந்த அக அரசியல் நோக்கங்களும் கிடையாது' என்பதாகும்.

இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸினால் முன்வைக்கப்பட்டிருந்தாலும் அவற்றினை சாய்ந்தமருது உள்ளூராட்சி கோரிக்கையினை வலியுறுத்தியோர்களிடம் இது ஒரு காரணமாக அமைய முடியாது என்பதை மிகவும் வலிமையான ஆதாரங்களின் ஊடாக முன்வைத்துமிருந்தனர். அவற்றினை போதிய சான்றுகளுடன் நிறுவி கட்டுடைப்புச் செய்யாமல் ஏனோதானோ என்ற அலட்சிய நடவடிக்கையை முஸ்லிம் காங்கிரஸ் இதுவிடயத்தில் பிரயோகித்து வந்திருப்பதும் நமது அவதானங்களுக்கு அப்பாலானதல்ல.

## அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் ஏமாற்றியதா?

**21.10.2016இல் சாய்ந்தமருதில் அமைச்சர்களான றிஷாட் பதியுதீன், பைஸர் முஸ்தபா ஆகியோர் கலந்துகொண்ட வைபவமொன்றில் "சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி சபையை நான் தருவேன் அதில் சந்தேகப்படத் தேவையில்லை" என்ற கருத்தை அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்திருந்தார்.** அதன் பின்னர் 18.12.2016இல் வசந்தம் தொலைக்காட்சியின் அதிர்வு நிகழ்வில் கலந்துகொண்ட மு.கா. தலைவர் றவூப் ஹக்கீம் சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை சம்பந்தமான கேள்விக்கு பதிலளிக்கும்போது தெளிவாக இரண்டு விடயங்களைக் குறிப்பிட்டார்.

*(01) உள்ளூராட்சி அமைச்சராக பைஸர் முஸ்தபா இருப்பதால் அவரை நாம் ஓரிரு முறை சந்தித்து சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை நிறுவுவது குறித்து விளக்கங்களை முன்வைத்திருந்தோம். எமது சந்திப்பை அவர், அவரிடமிருந்து புள்ளி பெறுவதற்காக நாம் சென்றிருந்ததாக வர்ணித்திருந்தார். அவரிடமிருந்து எந்தவிதமான புள்ளிகளையும் பெற வேண்டிய தேவை எங்களுக்கில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(02) சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி சபையை பைஸர் முஸ்தபா வழங்குவதாக வாக்குறுதியளித்திருக்கிறார். அவரே அதற்குரிய அமைச்சருமாவார். எனவே, "எங்களை அழைத்தோ அழைக்காமலோ உரிய அமைச்சராக அவர் இருப்பதினாலும் இதனை வழங்கி அதற்கான விழாவை அவர்கள் கொண்டாடினால்கூட எங்களுக்குச் சந்தோஷமே" எனக் குறிப்பிட்டார்.

இவற்றினூடாக மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் தன்னிடமிருந்த சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை வழங்க வேண்டும் என்ற கடமைப் பந்தை நியாய பூர்வமான வர்ணத்தைப் பூசி கைமாற்றிவிட்டார். இது அவர் தனது பொறுப்பி லிருந்து விலகிச் சென்றார் என்று பார்ப்பதைப் பார்க்கிலும் தாராளத் தன்மையோடும், விட்டுக்கொடுப்போடும் யாருடாகவேனும் சாய்ந்தமருது மக்களின் தேவைப்பாடு நிறைவடைந்தால் போதுமானது என்ற மனோநிலையில் தன்னைக் காட்டிக்கொண்டார் என்று கருத முடியும்.

இந்நிலையானது சாய்ந்தமருது உள்ளூராட்சி சபையை உருவாக்குவதில் அதிக பொறுப்பும், கடப்பாடும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸைச் சார்ந்த அமைச்சர் ரிஷாட் பதியுதீன் மற்றும் சாய்ந்தமருது ஊரை பிரதிநிதித்து வப்படுத்தும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல், முன்னாள் கல்முனை மேயர் சிராஸ் மீராஸாஹிப் போன்ற முக்கியஸ்த்தர்களின் கரங் களில் தங்கியிருகின்றது.

இன்றைய உள்ளூராட்சி அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியினர்களுக்கு நெருக்கமானவராகவும் அதேவேளை இக்கோரிக்கை நியாயமானது என்று ஏற்றவராகவும் இருப்பதினாலும் இலகுவாக சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை கோரிக்கையினை எய்திக்கொள்ளக்கூடிய சூழலும் வாய்த்திருந்தது. இதனை வலுப்படுத் துவதற்கு துணைக்காரணியாக அண்மையில் பொலன்னறுவை மாநகர சபை மற்றும் பொலன்னறுவை பிரதேச சபை என்பனவற்றின் உருவாக்கமும் இணைந்திருக்கின்றது. அப்படி இருந்தும் இச்சந்தர்ப்பங்களும் தவற விடப்பட்டிருக்கின்றன.

நாட்டின் இன்றைய அதிமேதகு முதற் தலைவரான ஜனாதிபதி மைத்திரிப்பால சிறிசேன அணியைச் சார்ந்தவரான மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா இருப்பதினால், சாய்ந்தமருதுக்கு உள்ளூராட்சி சபை ஒன்றை வழங்கு வதிலிருக்கின்ற நியாயத்தை எளிதாக ஜனாதிபதிக்கு தெரிவித்திருக்க முடியும். அதேநேரம் நாட்டின் பிரதமரான ரணில் விக்ரமசிங்க சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை நிறுவப்படும் அவசியத்தை ஏலவே விளங்கியவராவார். அதுமாத்திரமன்றி சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி சபையை தருவதாக உறுதியளித்தவருமாவார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இது விடயத்தில் பகிரங்கமாக ஏற்றும் தமது ஆதரவினை வெளிப்படுத்தியும் உள்ளனர். ஆகவே, அரசியல் காய்நகர்த்தல்களிலூடாகவும் சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை கோரிக்கை பின்தள்ளப்படுவதற்கு எந்தத் தடையு மில்லை என்பதும் இதிலிருந்து தெளிவாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி சபை நிறுவப்படுவது தொடர்ந்தும் தள்ளிச் செல்லுமேயானால், அதன் முழுப்பொறுப்பையும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் உட்பட அவரது கட்சி சார்ந்த இவ்வூர் அரசியல் பிரமுகர்களும் பழியை கூட்டு மொத்தமாக சுமக்க வேண்டிய கடப்பாட்டிலிருந்து தப்புவதற்கு எந்த வாய்ப்பையும் முன்னிறுத்தாத சூழலை உருவாக்கி, முஸ்லிம் காங்கிரஸ் இதிலிருந்து விலகிச் சென்றிருக்கின்றது.

**என்றாலும், அவர்கள் சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை நிறுவுவதில் கரிசனை காட்டி பல முன்னேற்பாடுகளை தற்போதைய அரசாங்கத்தில் முன்னெடுத்திருந்த நிலையில், சாய்ந்தமருதில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்ட உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா, சாய்ந்தமருதுக்கு உள்ளூராட்சி சபையை வழங்குவதாக திட்ட வட்டமாக உறுதியளித்திருந்தார். இதற்கு காலாக அமைந்திருந்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸே இனி இந்த விடயத்தை முழு மூச்சாக நின்று பெற்றுத்தரல் வேண்டும். பெற்றுத்தரவில்லையானால் அந்த இயலாமையின் சொந்தக்காரர்களாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸினை இம்மக்கள் கணிப்பது தவிர வேறு வழி இருக்காது.**

சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை கோரிக்கையின் பந்தை பவ்வியமாகவும், பக்குவமாகவும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பக்கம் நகர்த்தியிருப்பது அவரது அரசியல் சாணக்கியத்தின் உச்சபட்ச செயற்பாடு என்பது உற்று நோக்கும்போது நாம் விளங்கிக்கொள்ள முடியும். என்றாலும் இனி அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்தான் சாய்ந்தமருது உள்ளூராட்சி சபையின் கோரிக்கையின் வெற்றி, தோல்வியில் முழுப்பங்காளர்களாக இருக்கப்போகின்றனர் என்பது மட்டும் நிச்சயமானது.

சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை கோரிக்கை அரசியல்வாதிகளின் பலப்பரீட்சைக்குரிய ஒன்றாக காலத்துக்குக்காலம் மாற்றப்படுவது ஓர் ஆரோக்கியமான விளைவைத் தராது. உண்மையில் இக்கோரிக்கையானது இம்மக்களின் உணர்வோடு சம்பந்தப்பட்டது. அதனோடு விளையாட எத்தனிப்பது நியாயமற்றது. "சாது மிரண்டால் காடு கொள்ளாது" என்று ஒரு பழமொழி உண்டு. இதனடிப்படையில் இம்மக்கள் முடிவெடுக்கும் நிலையென்பது பொதுவாக முஸ்லிம் கட்சிகளுக்கு பேராபத்தானது.

## சறுக்கலும் கொதிப்பும்

இவை ஒருபுறமிருக்க கடந்த 2017 ஆகஸ்ட் மாதம் "விரைவில் சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி மன்றம் பிரகடனப்படுத்தப்படவுள்ளதாக" அமைச்சர் றவூப் ஹக்கீம் மற்றும் பிரதியமைச்சர் ஹரீஸ் வெவ்வேறான இரு வைபவங்களில் தெரிவித்திருந்தனர். இந்நிலையில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் றிஷாட் பதியுதீன் உட்பட்ட குழுவினர் 14.08.2017இல் அமைச்சர் பைஸர் முஸ்தபாவை கொழும்பில் சந்தித்து சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றம் சம்பந்தமாக கலந்துரையாடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் எதிர்வரும் 28.08.2017இல் சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி மன்ற அறிவிப்பு வர்த்தமானியில் வெளிவர இருப்பதாக செய்தி பரப்பப்பட்டது.

அதுமட்டுமன்றி இச்செய்தியை சாய்ந்தமருது பள்ளிவாசல் பரிபாலன சபையினரிடம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரதித் தலைவரும் அரச (பொது) வர்த்தக கூட்டுத்தாபனத் தலைவருமான ஏ.எம். ஜெமீல் தெரிவித்ததோடு அவரது பங்குபற்றுதலோடு பள்ளி நிர்வாகம் ஒரு பத்திரிகையாளர் மாநாட்டையும் நடத்தி இருந்தனர்.

**28 ஆகஸ்ட் 2017இல் வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் வெளிவர இருப்பதாகவும் கதை பேசப்படுவது உக்கிரமடைந்ததன் காரணமாக கல்முனைக்குடி சமூகத்தினரிலிருந்து குறித்த சிலர் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளிவரக்கூடாது என்றும் அவ்வாறு நடைபெற்றால் அது கல்முனை நகரத்தை முஸ்லிம்களிடமிருந்து கைநழுவிவிடும் என்ற அச்சத்தையும் முன்வைத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் மற்றும் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா ஆகியோரிடம் சென்று முறையிட்டதன் காரணமாக சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றத்திற்கான வர்த்தமானி அறிவித்தல் தடைப்பட்டது. இதற்கிடையில் இவர்கள் பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்கவை நேரடியாக சந்திக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் கைகூடாத நிலையில் ரவூப் ஹக்கீம் ஊடாக கல்முனைக்குடி சமூகத்தினரின் ஆட்சேபனை எத்திவைக்கப்பட்டதாக ஒரு கதையும் உண்டு.**

எதிர்பார்க்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் 28ஆம் திகதி வெளிவராமல் தாமதமாகலாம் என அறிந்துகொண்ட சாய்ந்தமருது ஜும்மாஆப் பள்ளி நிர்வாகத்தினரும் ஊர்ப்பிரமுகர்களும் கடந்த 25.08.2017இல் கொழும்புக்குச் சென்று அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் இதுபற்றி முறையிட்டனர். அதற்கு அவர் சற்றுப் பொறுங்கள் என்ற முடிவையே அறிவித்தார். அதற்கு எங்களுக்கு உள்ளூராட்சி மன்றம் தருவேன் என்று வாக்குறுதி அளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை சந்திப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தாருங்கள் என கேட்டதற்கு இணங்க 28.08.2017 இல் பிரதமருடனான சந்திப்பும் நிகழ்ந்தது.

**அச்சந்தர்ப்பத்தில் சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி மன்றம் ஏற்படுத்தும் விடயத்தில் தாம் கவனம் எடுப்பதாக வாக்குறுதியளித்ததாக கூறப்படுகின்றது. இந்த இரண்டு சந்திப்புக்களின்போதும் அமைச்சர்களான ரிஷாட் பதியுதீனையோ, பைஸர் முஸ்தபாவையோ பள்ளிவாசல் குழுவினர் சந்தித்திருக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாய்ந்தமருது தனியான உள்ளூராட்சி மன்றக் கோரிக்கை ஆபத்தானது என்கின்ற ஒரு மாயையை கட்டமைத்து அதன்பால் மக்களை ஈர்த்துக் கொள்கின்ற முன்னெடுப் புக்கள் கல்முனைக்குடி சமூகத்தினரால் பல கோணங்களிலும் இன்று முன்வைக்கப்படு கின்றது. அவற்றின் யதார்த்தத்தையும், உண்மைத் தன்மையையும் இவ்விடத்தில் நோக்குவதன் ஊடாக கபடத்தனமான கருத்துகளையும் அபத்தமான குற்றச்சாட்டு களையும் களைந்து கொள்வதற்கு ஏதுவாக அமையும் என்ற அடிப்படையில் பின்வரும் கருத்துக்களை பதிவு செய்து வைக்க விரும்புகின்றேன்.

**சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கை கடந்த 2010களில்தான் பெரிதாக பேசப்பட்டதாகவும் 2011இல் நடைபெற்ற கல்முனை மாநகரசபை உள்ளூராட்சி தேர்தலின் அடிப்படையில் சாய்ந்தமருதைச் சேர்ந்த சிராஸ் மீராசாஹிப் மாநகர சபை முதல்வராக வாக்குகளின் எண்ணிக்கையில் நியமிக்கப்பட்டார். இரண்டு வருடங்களின் பின்னர் இவரை இப்பதவியிலிருந்து அகற்றி அப்பதவிக்கு சட்டத்தரணி நிஸாம் காரியப்பரை நியமித்ததினால்தான் இக்கோரிக்கை உக்கிரமடைந்ததாக ஒரு குற்றச் சாட்டை இதுவிடயத்தில் முன்வைக்கின்றனர்.**

கடந்த 1999களில் மர்ஹூம் அஷ்ரஃப் சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி மன்றக் கோரிக்கையை ஏற்றிருக்கின்றார் என்றால், அது 2010ஆம் ஆண்டுக்கு பின்னரான காலமா? இல்லையென்றால் அது 1987களிலிருந்து பேசப்பட்டு வந்த விடயம் மும்முரம் அடைகின்றது என்றுதான் அர்த்தப்படும். அதுமாத்திரமன்றி நிறைவேற்றிக்கொடுக்கப்பட வேண்டிய ஒன்றென்பதனாலும் அதனை ஏற்றிருக்கின்றார். ஆக சாய்ந்தமருது உள்ளூராட்சி சபையானது கடந்த 1987களிலிருந்து ஏதோ ஒரு வகையில் தொடர்ந் தேர்ச்சியாக கேட்கப்பட்டு வருகின்ற ஒரு கோரிக்கை என்பது மிகத்தெளிவானதே.

கடந்த 2010களுக்குப் பின்னர்தான் சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கை உக்கிரமடைந்தது எனக்கூறுவது உண்மையாயின் சாய்ந்தமருது ஜும்மாஆப் பள்ளிவாசல் கடந்த 1997இல் வெளியிட்ட "சாய்ந்தமருதூரின் வடக்கு எல்லையும் பொதுமக்கள் அறிய வேண்டிய உண்மைகளும் என்ற நூலில்", **"எதிர்காலத்தில் சாய்ந்தமருதுக்கு தனியான பிரதேச சபை ஒன்றை அமைப்பதற்கு தேவையான நிலப்பரப்பை எமது கிராமம் இழந்துவிடும்"** என்று குறித்துக் காட்டியிருப்பது சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கை கடந்த 2010களுக்கு முன்னரே பேசப்பட்ட ஒன்று என்பதையும் மற்றும் இப்பிரச்சினையில் சாய்ந்தமருது ஜும்மாஆப் பள்ளிவாசல் ஈடுபாட்டைக் காட்டியது என்பதையும் மிகத் துலாம்பரமாக எடுத்துரைக்கின்றது.

கடந்த 2010இல் நடைபெற்ற பொதுத்தேர்தலை அண்மித்த காலப்பகுதியில் பெரும்பரபரப்போடு சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக்கோரிக்கை முன்னெடுக்கப்படு கின்றது. இந்த முன்னெடுப்பின் காரணமாக கல்முனைத்தொகுதி எம்.பி. பதவி ஸ்ரீலங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் காங்கிரஸின் கையிலிருந்து நழுவிப்போய்விடுமோ என்கின்ற ஒரு அச்சம் காணப்பட்டதினால் சாய்ந்தமருதுக்கு முதல்வர் பதவி தருவது போன்ற ஒரு பாங்கை மு.கா காண்பித்தது.

**இதன் பிற்பாடு மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சராக அதாவுல்லாஹ் பொறுப்பேற்றிருந்தும் அவரிடம் நேரடியாகச் சென்று நமது சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றகோரிக்கையை நிறைவேற்றித்தருமாறு சாய்ந்தமருது ஜும்மாஆப் பள்ளிவாசல் கோரிக்கையை முன்வைக்க வேண்டுமென சில குழுக்கள் வேண்டுகோள் விடுத்திருந்தும் அதனைப் பள்ளிவாசல் செய்ய வில்லை. ஏனெனில், அதாவுல்லாஹ்விடம் கல்முனை மாநகர சபையிலிருந்து மூன்று புதிய சபைகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணப்பாடு இருந்ததினாலாகும்.**

சாய்ந்தமருதைச் சேர்ந்த சிராஸ் மீராசாஹிப் கல்முனை மாநகர சபை முதல்வர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் நியமிக்கப்பட்டதை சாய்ந்தமருது மக்கள் ஒரு வேறுபாட்டுச் சிந்தனையோடு பார்க்கவில்லை. அந்நிகழ் வானது கட்சி மட்டத்திலான பிரச்சினையாகவே எமது ஊர் மக்கள் பார்த்தனர் என்பதுவே உண்மையாகும். இதனை ஆணித்தரமாக நாம் கூறுவதற்கு பின்வரும் சம்பவம் போதிய சான்றாக கொள்ள முடியும்.

கடந்த 2015இல் நடைபெற்ற பொதுத்தேர்தல் என்பது சிராஸ் மீராசாஹிப் முதல்வர் பதவியிலிருந்து அகற்றப்பட்டதற்கு பின்னர் நடைபெற்ற தேர்தலாகும். முதல்வர் பதவியைத்தான் சாய்ந்தமருது மக்கள் விரும்பியிருந்தால் அதன் முதல் வெளிப்பாடக எங்கள் ஊருக்கான அரசியல் அதிகாரத்துவத்தை பறித்த கட்சி என்ற அடிப்படையில் முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களிப்பதிலிருந்து சாய்ந்தமருது மக்கள் விலகியிருப்பார்கள்.

அதேநேரம் தமது மு.கா. மீதான எதிர்ப்பினை, பதவியை பறிகொடுத்த சிராஸ் மீரா சாஹிப் அந்த தேர்தல் களத்தில் போட்டியிடுகின்றார், அதனால் அவருக்கே தங்கள் வாக்குகளை அளித்துமிருப்பர். அவ்வாறு நிகழாமை என்பது முதல்வர் பிரச்சினை அல்ல சாய்ந்தமருது மக்களின் எதிர்பார்ப்பு. மாறாக சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக்கோரிக்கையே அவர்களின் எதிர்பார்ப்பு என்பதினால் இந்தவிடயத்தை தனியாகவே கையாள்வ திலிருந்தும் புரியக்கூடியதாகும்.

## மர்ஹூம் அஷ்ரஃப் எதிர்த்தாரா?

சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி மன்ற கோரிக்கையினை மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்கள் மறுத்து இருந்ததாகவும் அதனை சாய்ந்தமருது ஜும்மாஆப் பள்ளிவாசல் உட்பட பல தேர்தல் மேடைகளில் பேசியதாகவும் குறிப்பிடுகின்றனர். ஆதலால், சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி மன்றம் மர்ஹூம் அஷ்ரஃப் மறுத்தது என்பதினால் அது வழங்கப்படக்கூடாது என்ற ஒரு வாதத்தை இது விடயத்தில் சிலர் முன்னிறுத்துகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் புரிந்துகொள்ள வேண்டிய இரண்டு பக்கங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று மர்ஹூம் அஷ்ரஃப் இதனை மறுத்தார் என்பது உண்மையாகும். அதனால் அது தொடர்ந்தும் மறுக்கப்பட வேண்டிய ஒன்றல்ல என்பதை அவர் வாழும் காலத்திலேயே நிரூபித்து சென்றிருப்பதை நோக்க விரும்பாதவர்களாக இருப்போர்கள்தான் இக்குற்றச்சாட்டை முன்வைத்து வேறு திசை நோக்கி பயணிக்கின்றனர் என்று நாம் குறித்துக் காட்ட வேண்டி இருக்கின்றது.

மர்ஹூம் அஷ்ரஃப் சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி மன்ற கோரிக்கையினை மட்டுமல்ல அதனோடு இணைந்த மற்றொரு கோரிக்கையான சாய்ந்தமருது பிரதேச செயலக கோரிக்கையையும் அவர் செய்து தருவதற்கு ஆயத்தமாக இராத ஒரு போக்கை கடுமையாக கடைபிடித்தார் என்பதும் நாம் மறுப்பதற்கில்லை. இதில் அவரது உள்நோக்கம் எதுவென்பது பற்றி நாம் இங்கு ஆராய வேண்டிய தேவையை தவிர்த்து, அவர் இவ்விரு கோரிக்கையையும் நியாயமானது என்று கண்டது மட்டுமன்றி அதில் ஒன்றை செயல்படுத்தியும், இன்னொன்றை செய்யவேண்டும் என்ற அவரது விருப்பை நமது நாட்டின் உயர் சபையான நாடாளுமன்றத்திலேயே பதிவாக்கியிருக் கின்றார்.

**கடந்த 1999.04.21 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் 'பிரதேச சபைகள் திருத்த சட்டமூல உரையில் கலந்துகொண்டு மாபெரும் தலைவர் மர்ஹூம் எம். எச். எம். அஷ்ரஃப் உரையாற்றும்போது, 'சாய்ந்தமருதுக்குத் தனியான பிரதேச சபையை ஏற்படுத்தித் தர வேண்டும்' என்று குரல் எழுப்பினார்.**

**அதேதினம் இச்சட்டமூல விவாதத்தில் கலந்துகொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இன்றைய தலைவர் ரவூப் ஹக்கீம் 'ஆணைக் குழுவின் முன்பு கல்முனைப் பிரதேசத்திலே சாய்ந்தமருதுக்கென்று பிரத்தியேக செயலகமும், பிரதேச சபையும் அமைய வேண்டும் என்று இருபதுக்கும் மேற்பட்ட மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன" என்ற விபரத்தை எடுத்துக்காட்டியிருந்தார்.**
*(நன்றி : தினகரன் 23.04.1999)*

ஆகவே இவ்வாறு பேசுவதோடு மட்டும் நிறுத்திவிடாது **சாய்ந்தமருதுக்கான உப பிரதேச செயலகத்தை அஷ்ரஃப் உருவாக்கித் தந்திருந்தார் என்பது மிகப் பகிரங்கமானது. ஆகையால் ஒரு மனிதர் குறித்ததொரு விடயத்தில் இரண்டு விதமான கருத்துக்களை வெளிப்படுத்துவாரேயானால் அவரது பிந்திய கருத்து எதுவென்பதும் எதனை நடைமுறைப்படுத்த முனைந்தார் என்பதும்தான் இதில் முக்கியமானதும் எடுத்துக் காட்டாகவும் முன்வைக்கப்பட வேண்டியதுமாகும்.**

**மாறாக அவர் செயல்படுத்த துணிந்த பகுதியை மறைத்து, நமது வசதிக்காக அதனை பிரயோகிப்பதென்பது அவர் மீது அபாண்டமாக பழி சுமத்துகின்ற ஒரு கோணத்தை கொண்டதென்பதையும், மரணித்தவர் மீது இல்லாத ஒன்றைக் கொண்டு குறை காண்பதென்பதும் நேர்மைக்குப் புறம்பானதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு சிலர் குழப்பமடைகின்ற பகுதி எதுவென்றால், மர்ஹூம் அஷ்ரஃப் **1999** களுக்கு முன்னர் சாய்ந்தமருதுக்கான பிரதேச செயலகம், உள்ளூராட்சி மன்ற கோரிக்கைகள் என்பன இவ்வூர் மக்களினால் முன்வைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் முதலில் பிரதேச செயலகம் வேண்டுமா அல்லது உள்ளூராட்சி மன்றம் வேண்டுமா என்பதில் நீங்கள் ஒருமித்த கருத்தை முன்வைக்க வேண்டுமென்று குறிப்பிட்டதை இன்று கோடிட்டு காட்ட முனைகின்றனர்.

உண்மையில் அவ்விரு கோரிக்கைகளும் வெவ்வேறான குழுக்களின் மூலம் முன்வைக்கப்பட்டாலும் அவை இரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டதாகும். அதனால்தான் இவ்வூர் மக்கள் இரண்டையும் கேட்டிருந்தனர் என்பது ஒரு யதார்த்தமாகும். ஏனெனில், பிரதேச சபைகள் சட்டம் உருவாக்கப்பட்டபோது இயலுமானவரை ஒவ்வொரு பிரதேச செயலகங்களை உள்ளடக்கியதாக அமைப்பதற்கு முக்கியத்துவம் வழங்கியிருந்தன. ஆதலால் இரண்டும் வேண்டும் என்ற கோரிக்கையை வெவ்வேறு குழுக்களாகவும் முன்வைத்து மட்டுமன்றி ஒரே குழுவாகவும் இவ்விரண்டு கோரிக்கையையும் முன்வைத்துமிருந்தனர்.

கடந்த 1999களுக்கு முன்னர் மறுத்திருந்த இவ்விரண்டு கோரிக்கையையும் பற்றி அஷ்ரஃப் பின்னர் சரிகண்டு கடந்த **1999**களின் ஆரம்பப் பகுதியில் நாடாளுமன்றத்தில் பேசியது மட்டுமன்றி அதில் ஒன்றான **பிரதேச செயலகத்தை நிறுவியும் தன்னை சுத்தப்படுத்திச் சென்றிருப்பதை நாம் புரிந்துகொள்ளத் தவறுகின்றோம். மற்றொன்று மறுத்தவரே அதனை தர முனைகின்றார் என்றால் அது சந்தேகத்திற்கு அப்பால் நியாமானது என்பதையே அர்த்தப்படுத்தும்.** இதனையும் இது விடயத்தில் ஏற்றிவைத்து வாசித்து விளங்கிக்கொள்ள மறுப்போர் கள்தான் மேற்படி அஷ்ரஃபின் கூற்றை சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்ற கோரிக்கைக்கு என்றும் எதிராக இருந்தவர் போன்று திசை திருப்ப முனைபவர்கள் ஆவர்.

## மர்ஹூம் மன்சூர் சூழ்ச்சி செய்தாரா?

கடந்த **1987**களில் அறிமுகம் செய்யப்பட்ட பிரதேச சபைகள் விடயத்தில் கல்முனையை அண்மித்திருந்த கரைவாகு தெற்கு, கரைவாகு மேற்கு, கரைவாகு வடக்கு ஆகிய மூன்று உள்ளூராட்சி சபைகளையும் அன்று நடைமுறையிலிருந்த கல்முனை பட்டின சபையோடு இணைத்து கல்முனை பிரதேச சபையாக மாற்றப்பட்டது.

**உள்ளூராட்சி சபைகள் நான்காக காணப்பட்ட போதிலும் இந்த நான்கு உள்ளூராட்சி சபைகளையும் உள்ளடக்கிய ஒரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு (பிரதேச செயலகம்) மாத்திரம் அன்று இயங்கி வந்ததினாலும் "இயலு மானவரை ஒவ்வொரு பிரதேச செயலகங்களும் ஒரு சபை"யாக அமைக் கப்படல் வேண்டும் என்கின்ற நியதியின் அடிப்படையில்தான் ஒன்றிணைக் கப்பட்டதேயன்றி அது ஒரு திட்டமிட்ட இணைப்பாக அமையவில்லை என்பதுதான் சாய்ந்தமருது மக்களின் கருத்தாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிணைக்கப்பட்ட கல்முனை பிரதேச சபை ஏற்படுத்துவதற்கு உள்ளூர மர்ஹூம் அமைச்சர் மன்சூர் உடந்தையாக இருந்தார் என்று நாங்கள் எப்பொழுதும் குற்றம் சாட்டவில்லை. ஆனால், கல்முனைக்குடி பகுதியில் இருந்து இது தொடர்பில் கருத்து தெரிவிக்கின்ற சிலர் மர்ஹூம் மன்சூர் செய்ததாகவும் அவர் செய்தால் அதில் நன்மை இருக்கும் என்று நம்ப வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றனர். இதில் உண்மை இருக்கிறதா இல்லையா என்பதற்கு அப்பால், கால ஓட்டத்தில் ஏற்படுகின்ற தேவையின் நிமித்தம் ஒரு பிரதேசத்தில் உள்ளூராட்சி மன்றம் ஒன்றை ஏற்படுத்தப்பட வேண்டும் என்றிருந்தால், அதனை உருவாக்குதல் இயல்பானது.

கடந்த 1987இல் கல்முனை பிரதேச சபை உருவாகியபோது மர்ஹூம் அமைச்சர் மன்சூருடன் சாய்ந்தமருதைச் சேர்ந்தவர்கள் இருந்து அரசியல் செய்தவர்கள் இதனை எதிர்க்கவில்லை. அத்தகையோர்கள் இப்போது எதிர்ப்பது ஏன் என்கின்ற ஒரு வினாவையும் கல்முனைக்குடி சமூகத்தினர்கள் குறிப்பாக்கி கேட்பதை அவதானிக்கலாம். இதற்கு இரண்டு பதில்களை நாம் பெற முடியும்.

ஒன்று, அமைச்சரோடு இருந்து அரசியல் செய்த சாய்ந்தமருது நபர்களை பொதுவாக ஒரு அமைச்சரோடு கூட்டிணைந்து செயற்படுகின்றபோது அவரது எந்த செயற்பாட்டையும் கேள்விக்குட்படுத்துவதில்லை என்கின்ற பொதுவான நடைமுறையின் அடிப்படையில் அவர்களினது மௌனத்தையும் நாம் இவ்விடத்தில் எடுத்துக்கொள்ள முடியும்.

இந்த அடிப்படையில் அவர்களது மௌனத்தை பார்க்க வேண்டும் என்று நாம் இங்கு குறிப்பிட்டாலும் அவ்வாறு மர்ஹூம் அமைச்சர் மன்சூர் இதில் சதி செய்யவில்லை என்றுதான் சாய்ந்தமருது மக்கள் நம்புகின்றனர். ஆகவே, அவர்கள் மௌனமாக இருந்தார்கள் என்பதில் எவ்விதமான உண்மைகளும் இருக்க வாய்ப்பில்லை.

இரண்டாவது, அன்று மௌனமாக இருந்தவர்கள் இன்று கேட்கின்றார்கள் என்றால் அந்தச் சூழலிலிருந்து இன்றைய காலகட்டம் மாறுபட்டிருக்கின்றது. அதாவது குறித்த தேவை இன்று அவசியப்பட்டிருக்கின்றது என்றும் எடுத்துக் கொள்ளலாம். பரீட்சார்த்த ரீதியாக ஒரே சபையின் கீழ் வாழ்கின்றபோது ஒரு சபை செய்யவேண்டிய சேவைகளை நிறைவாகச் செய்ய முடியாத இயலாமையை அனுபவிக்கின்றோம். இந்த அவலநிலையை நிவர்த்திக்க வேண்டும் என்கின்ற நியாயமான எதிர்பார்ப்பின் அடிப்படையில் என்றும் இதனை பார்க்க முடியும்.

அதேநேரம், கல்முனை ஒரு பிரதேச சபையாக உருவாக்கப்படுகின்ற அந்தக் காலத்திலிருந்தே சாய்ந்தமருதுக்கு தனியான உள்ளூராட்சி மன்றம் அமைய வேண்டும் என்கின்ற கோரிக்கையும் விடுக்கப்பட்டிருப்பதினால் இத்தகைய ஐயங்கள் வேண்டுமென்று எழுப்பப்படுகின்றதேயன்றி நியாயத்தின் அடிப்படையிலிருந்து எழுப்பப்படவில்லை என்பது மிக நிதர்சனமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நமது நாட்டில் ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் மொத்த எண்ணிக்கையைவிட இன்று அதிகரித்து காணப்படுகின்றது. ஆயின், மேலதிகமான உள்ளூராட்சி சபைகள் உருவாக்கப்படக் கூடாது என்பதோ, முன்னர் உருவாக்கப்பட்டிருக்கின்ற சபைகளிலிருந்து வேறு சபைகள் ஏற்படுத் தப்படக் கூடாதென்றோ சொல்வதென்பது நியாயமான ஒரு கருத்தாடலாக இருக்க முடியாதென்பது சிறிய அறிவுள்ளவர்கள்கூட புரிந்து கொள்ளக் கூடியதாகும்.**

## பிரிப்பெல்லாம் பிரிவினை வாதமா?

சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி மன்றக் கோரிக்கையானது ஒரு பிரிவினைவாத கோஷமென சிலர் கருத்துரைக்கின்றனர். இங்கு பிரிவினைவாதம் என்றால் என்ன என்பது தொடர்பில் போதிய அறிவு அல்லது விளக்கமின்மையால் முன்வைக்கப்படுகின்ற ஒரு குற்றச்சாட்டாகவே இதனை நாம் பார்க்கின்றோம். **உண்மையில் சாய்ந்த மருதுக்கும், கல்முனைக்குடி ஊருக்குமான உறவு, நெருக்கம் என்பன சாதாரணமாக பிரிந்துவிடக் கூடிய பிரிவுக்குரிய ஒன்றல்ல. மாறாக அது திருமண பந்த உறவாலும் சிநேக உறவாலும் பின்னிப்பிணைந்த ஒன்றாகும்.**

ஓர் உள்ளூராட்சி மன்றத்தினால் மக்களுக்கு செய்யப்பட வேண்டிய சேவைகளை திருப்திகரமாக செய்ய முடியாத ஒரு நிலையை நமது கல்முனை மாநகர சபை கொண்டிருப்பதென்பது மிகத் தெளிவானது இதற்கு பிரதான காரணமாக இருப்பது பெரும் பரப்பளவை கொண்ட ஒரு தேர்தல் தொகுதிக்கே ஒரு உள்ளூராட்சி சபை என்ற அடிப்படையில் அமைந்திருப்பதாகும். இதனோடு நமது கல்முனை மாநகர சபை மக்களுக்கு வழங்கும் சேவையினை செய்வதற்கான போதிய வளப்பற்றாக் குறையும் கொண்டிருப்பதாகும்.இதனால்தான் சாய்ந்தமதுக்கான உள்ளூராட்சி மன்றக் கோரிக்கை வலுப்பெற்றுக் காணப்படுவதன் யதார்த்தப் பின்னணியாகும்.

ஆகவே, ஓர் உள்ளூராட்சி மன்றப் பிரிப்பு என்பது சமூகத்திற்குள்ளோ அல்லது இனங்களுக்குள்ளோ பிரிவினையை கட்டியெழுப்புவதற்கான சுவரல்ல. ஒரு நாடு என்ற வகையில் சுமார் 336 உள்ளூராட்சி மன்றங்கள் இன்று இருக்கின்றதென்றால், அவை ஒவ்வொன்றும் சில ஊர்களை உள்ளடக்கியதாகவே இருக்கும். இதற்காக வேண்டி ஒரு சபையில் வாழும் மக்கள் மற்றொரு சபையில் வாழும் மக்களைவிட்டு பிரிந்து செயற்படுகின்றனர் என்று அர்த்தம் எடுப்பதில்லை. மாறாக உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களை செவ்வனே செய்வதற்கு இலகுபடுத்துவதற்காகவே குறித்த பிரதேசங்களை உள்ளடக்கி உள்ளூராட்சி மன்றங்களாக அடையாளப்படுத் தப்படுகின்றன.

நமது நாட்டில் ஒரு உள்ளூராட்சி மன்றம் உருவாக்கப்படுகின்றது என்றால் அது ஒருபோதும் தனித்தேசமாக பிரிந்து செல்கின்ற பிரிவினை வாதத்தை ஒத்ததான ஒன்றல்ல. மாறாக நாட்டில் நடைமுறையிலிருக்கின்ற ஒருவகை நிர்வாகத்தை இலகு படுத்துவதற்காக பிரிக்கப்படுகின்ற அல்லது வகுக்கப்படுகின்ற ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் உள்ளூராட்சி மன்ற அதிகாரம் என்பது குட்டி அரசாங்கம் என்ற அரசியலாக நோக்கப்படுகின்றது.

## உள்ளூராட்சி மன்றங்கள் ஏன் தேவை?

“உள்ளூராட்சி அங்கங்கள் (மன்றம்) ஜனநாயக ஆட்சி முறையின் பயிற்சிக் கூடங்களாக செயற்படுகின்றதோடு, உள்ளூர் மக்களைப் பொறுத்து தத்தமது தேவைகளை தாமே நிறைவேற்றவும் சந்தர்ப்பத்தை வழங்குகின்றன. சில உள்ளூர் விடயங்களை மத்திய அரசாங்கத்தினைவிட உள்ளூராட்சி அங்கம் (மன்றம்) சிறப்பாகச் செய்யக் கூடும். ஏனெனில் அதுவே அந்தப் பிரதேசத்தின் தேவைகளையும், குறைகளையும் நன்கறிந்திருக்கும். மக்கள் ஆகக்கூடிய சேவையினைப் பெற வேண்டுமென்பதே இதன் அடிப்படை நோக்கமாகும்.

மத்திய அரசாங்கம் நிதி உதவிகளையும் வளங்கள் முதலியவற்றையும் உள்ளூராட்சி அங்கங்களுக்கு வழங்கும். அத்தகைய வளங்களையும் நிதி உதவிகளையும் பெற்று எப்பகுதிக்கு எத்தகைய தேவைகள் உண்டென்பதை அறிந்து அவற்றை அது செலவிடும்.

சுருக்கமாக மத்திய அரசாங்கம் நாடு முழுவதற்குமென சில சேவைகளை ஆற்ற முன்வருகின்றது. ஆனால் அச்சேவைகளைத் தன்னை விட, உள்ளூராட்சி அங்கங்கள் சிறப்பாக செயற்படுத்தும் எனக் கருதுவதால், அவ்அங்கங்களுக்கு (உள்ளூராட்சி மன்றங்களுக்கு) சில அதிகாரங்களை வழங்கி, அவ்அங்கங்கள் (உள்ளூராட்சி மன்றங்கள்) அக்கடமைகளைச் சரிவர நிறைவேற்றுகின்றனவா என்பதை மேற்பார்வை செய்து வருகின்றது” **(நன்றி : இலங்கை அரசியல் - பேராசிரியர். அம்பலவாணர் சிவராசா)**

எவ்வாறு நமது நாட்டில் நாடாளுமன்ற அரசாங்கம் இருந்து நிர்வாகம் செய்கின்றதோ அதைப் போன்று நாட்டில் பல பாகங்களிலும் அரசாங்கத்தின் செயற்பாட்டில் குறித்த சில விவகாரங்களை மாத்திரம் கையாளுகின்ற சபைதான் உள்ளூராட்சி மன்றங்களாகும். ஆயின், அது எல்லாவகையிலும் பிரிந்து செல்கின்ற பிரிவினைவாதத்தின் அடிப்படையில் தோற்றுவிக்கப்படுவதல்ல. மாறாக அவற்றின் அரசியல் அதிகாரங்களின் நிர்வாகத்தை செயற்படுத்துவதற்காக அனுமதிக்கப்படுகின்ற இயல்பான பிரிப்பன்றி இது வேறில்லை.

இதனை ஒரு எளிய உதாரணத்தினூடாக புரிந்துகொள்ள முடியும். அக்கரைப்பற்றில் வாழும் முஸ்லிம் மக்களுக்காக கருங்கொடித்தீவு என்கின்ற ஒரு உள்ளூராட்சி மன்றமே இருந்தது. அது இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒன்று மாநகர சபையாகவும், இன்னொன்று பிரதேச சபையாகவும் இன்று செயற்பட்டுக் கொண்டிருகின்றது. அப்படியென்றால் ஒரே ஊராக இருந்த அந்த மக்கள் இன்று இரண்டு ஊராக மாறி, பிரிவினைவாதிகளாக ஆகிவிட்டார்களா? இல்லை என்பது நாம் சொல்லாமலே புரிகின்ற ஒன்றாகும்.

**அதுபோன்றுதான் கல்முனை மாநகர சபையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றமாக உருவாக்கப்படுகின்றபோது மாத்திரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒற்றுமைக்கு பங்கம் வந்ததாகவும் பிரிவினைவாதம் தலைதூக்குவதாகவும் பரப்புரைசெய்ய முனைவதென்பது நியாயமானதா? அது ஒருபோதும் நீதியான கூற்றாக இருக்க முடியாது.**

அவ்வாறு சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றம் உருவாக்கப்பட்டாலும்கூட தேர்தல் தொகுதி என்ற அடிப்படையில் நாம் ஒன்றித்திருப்பதை மறந்துவிடுகின்றோம். அப்படி ஒற்றுமை பேணப்படுகின்றதென்றால், அதற்குள் உள்ளூராட்சி மன்ற சேவைகளை திருப்திகரமாக பெற்றுக் கொள்வதற்காக வேண்டி அமைகின்ற ஒரு சபையாகவே சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றம் இருக்கும். அது எப்படி ஒற்றுமையைச் சீர் குலைப்பதென்று கூற முடியும்? அவ்வாறு சொல்வதில் உண்மைத் தன்மை இல்லை என்பதே உறுதியானது.

இவ்விடத்தில் நாம் இன்னொன்றையும் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். கல்முனை மாநகர சபை தமது சேவைகளை வழங்குவதில் சாய்ந்தமருது ஊரை மாத்திரம் புறக்கணித்து செயற்படுகின்றது என்கின்ற அடிப்படையில் இந்த உள்ளூராட்சி மன்றக் கோரிக்கை எழவில்லை. சமச்சீராக உள்ளூராட்சி மன்றச் சேவைகளை பெற்றுக் கொள்ளும் ஒழுங்கிற்காகவே சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

இதற்கு இன்னொரு உதாரணத்தை இவ்விடத்தில் நாங்கள் பார்க்க முடியும். ஒரு மாநகர சபையின் செயற்பாட்டில் திண்மக் கழிவகற்றலும் ஒன்றாகும். அந்த விடயத்தை எடுத்துக்கொண்டால்கூட எமது ஊர் மட்டுமல்ல. கல்முனை மாநகரத்தில் அமைந் திருக்கின்ற அனைத்து ஊர்களிலும் சரியான முறையில் திண்மக் கழிவுகள் அகற்றப்படுவதில்லை. இதனால் எல்லா ஊர்களிலும் துர்வாடை வீசும் அளவிற்கு குப்பைகள் தேங்கிக் கிடப்பதைப் பார்க்கலாம்.

இவ்வாறான சேவைகளை இலகுபடுத்துவதற்கும் குறுகிய எல்லைகளாக மாறுகின்ற போது அதற்கேற்ப வளங்களை பெருக்குவதும், ஆளணிகள் அதிகரிப்பதும் போன்ற தொழிற்பாட்டை மேற்கொள்வதனை இலகுபடுத்தி வைக்கும். இப்போது இருக்கும் பெரும்பரப்பளவைக் கொண்ட கல்முனை மாநகரசபையில் சுமைகளின் பாரம் கனத்துச் செல்லவே வழி திறந்துவிடுவது தவிக்க முடியாததாகவே இருக்கும்.

இப்படியான சுமைகளை அகற்றியும் சுத்தமாக ஊரை வைப்பதற்கு வழி ஏற்படுத்திக் கொடுப்பதற்கு துணை செய்யும் ஒன்றாகவே சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கை பார்க்கப்பட வேண்டிய ஒரு விடயமே அன்றி மாறாக சமூகப்பலத்தை குறைக்கின்ற அல்லது இல்லாமல் செய்கின்ற சிதைவுக்கு வழிகாட்டுவதல்ல என்பதை திறந்த மனதுடன் சிந்திக்கும் எவரும் புரியத் தவறமாட்டார்கள். **மாறான மனோவியல்பு கொண்டவர்கள்தான் இதனை ஒரு பிரிவினைவாதமாக, ஒரு சமூகப்பிளவாக அடையாளப்படுத்துவதற்கு துடிக்கின்றனரேயன்றி வேறெந்த உண்மைகளும் இதிலில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்முனை மாநகர சபை தமிழர்களிடம் கைமாறுமா?

சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றம் ஒன்று உருவாக்கப்பட்டால் கல்முனை மாநகர சபையில் முஸ்லிம்களின் அரசியல் அதிகாரப்பலம் குன்றிவிடும் என்கின்ற ஒரு குற்றச்சாட்டையும் எழுந்தமாக முன்வைக்கின்றனர். அவர்களின் வாதத்தை நிருபிப்பதற்கான எந்த சான்றாதாரத்தையும் முன்வைக்காது வெறுமனே கருத்துரைப் பதானது அவற்றில் எந்தவிதமான உண்மைகளும் இல்லை என்பதை சான்றுப்படுத்தப் போதுமானது.

என்றாலும் இக்கட்டுரையின் முற்பகுதியில் கல்முனை மாநகர சபையில் தமிழர்களின் அரசியல் ஆதிக்கம் ஒருபோதும் முஸ்லிம்களின் அரசியல் செல்வாக்கைவிட அதிகரித்ததாக அமைய முடியாதென்பதை விகிதாசார அடிப்படையிலும் வட்டார அமைப்பிலும் நிருபிக்கப்பட்டிருப்பதை இதற்கு ஆதாரமாக எடுத்து நோக்கலாம்.

## மறைமுக மறுப்பு

**கடந்த 2017 ஆகஸ்ட் இலிருந்து நேரடியாக சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி மன்றம் வழங்கப்படக்கூடாது என்று மறுக்காது, மாறாக வேறொரு கோணத்தில் இதனை மறுப்பதை அவதானிக்க முடிகின்றது. அதன் வடிவம்தான் இன்று கல்மு னைக்குடி மக்களின் அரசியல் பிரமுகர்கள் மற்றும் புத்திஜீவிகள் எனக் கூறக்கூடிய விரல் விட்டு எண்ணக்கூடிய சிலர் கல்முனை மாநகர சபை நான்காகப் பிரிக்கப்பட வேண்டும் அதுவும் ஒரே சமயத்தில் என்று குறிப்பிடுவதைக் கொண்டு இதனை அறிந்து கொள்ள முடியும்.**

இதில் கவனிக்க வேண்டிய விடயம் யாதென்றால், சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றத்தை அமைப்பதற்காக அடையாளப்படுத்த வேண்டிய எல்லைகள் மிகத் தெளிவாக இருக்கின்றது. ஆதலால் அதனை பிரிப்பதென்பது எந்தவிதமான கேள்விகளுக்கும் இடமில்லாத தன்மையை அது கொண்டுள்ளது.

## கல்முனைச் சமூகம் என்ன செய்ய வேண்டும்?

**கல்முனை மாநகர சபையின் எல்லையினுள் அமைந்திருக்கின்ற சாய்ந்தமருது தவிர்ந்த ஏனைய பகுதிகளை மூன்று உள்ளூராட்சி மன்றங்களாக பிரிக்க முற்படுகின்றபோது அங்கு எல்லைப் பிரச்சினைகள் இரண்டு விதமாக காணப் படுகின்றன. ஒன்று கல்முனைக்குடி, கல்முனை ஆகியவற்றை ஒன்றிணைத்து ஒரு பிரிவை உருவாக்குகின்ற போது அதன் வடக்கு எல்லை எது என்பதில் சர்ச்சை இருக்கின்றது. முஸ்லிம் தரப்பினர்கள் தாளவட்டுவான் சந்தி என்றும் தமிழ் தரப்பினர்கள் கடற்கரைப்பள்ளிவாசல் வீதி என்றும் முரண்படுகின்றனர். இந்த முரண்பாடு எளிதில் தீர்த்துவைக்கக்கூடிய ஒன்றல்ல.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில், முன்னர் கல்முனை பட்டின சபைக்கென்று இருந்த எல்லைகள்தான் மீண்டும் எங்களுக்கு தரப்பட வேண்டும் என்று முஸ்லிம் தரப்பினர்கள் விடாப்பிடியாக இருக்கின்றனர். அதேபோன்று தமிழர் தரப்பினர்கள் தங்களது தெற்கு எல்லை கடற்கரைப்பள்ளி வீதியாக அமைய வேண்டும் என்று அடம்பிடித்துக் கொண்டு மிருக்கின்றனர்.

**இவ்விரு பகுதியினர்களும் ஒரு சமரசத்துக்கு வரவேண்டிய தேவை உள்ளது. இதனை பூர்த்தி செய்வதற்காக எந்த முயற்சியையும் இரு தரப்பினர்களும் முன்னெடுக்காத நிலையில் ஒரே சமயத்தில் கல்முனை மாநகரசபை நான்காகப் பிரிய வேண்டும் என்று முன்வைப்பதானது சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றத்துக்கான ஒரு முட்டுக்கட்டையேயன்றி, வழங்குவதை ஆதரிக்கின்ற முன்வைப்பல்ல.**

அதுமட்டுமன்றி இன்னொரு சபையாக பிரிக்கப்பட வேண்டிய கல்முனை வடக்கு உள்ளூராட்சி மன்றத்தின் வடக்கு எல்லை நீலாவணையாகும். நீலாவணையின் எல்லையில் இரண்டு மாவட்டங்களுக்கான தீர்க்கப்படாத எல்லைப் பிரச்சினை சுமார் 57 வருடங்களாக இருந்து வருகின்ற ஒன்று உடனடியாக தீர்க்கப்பட முடியும் என நம்பி நான்கு சபைகள் ஒரே நேரத்தில் உருவாக்கப்பட வேண்டும் என்று சொல்வது உள்நோக்கம் இல்லாத தெளிந்த கருத்தாக இருக்க முடியுமா? அப்படியிருக்க முடியாது. அது தந்திரோபாயக் கூற்று என்பதில் சந்தேகமில்லை.

**ஆகவேதான் ஒரே சமயத்தில் நான்காக கல்முனை மாநகர சபை பிரிக்கப்பட வேண்டும் என்று கூறுவது இன்னொரு வகையில் சாய்ந்தமருதுக்கு உள்ளூ ராட்சி மன்றம் வழங்கப்படக் கூடாது என்று மறுப்பதற்கான எத்தனமேயன்றி வேறில்லை. இதனை நாம் உறுதியாக கூறுவதற்கு இன்னொரு வலுவான காரணமும் இருக்கின்றது. அவை பற்றிப் பார்ப்போம்.**

## அன்று பிழையானது இன்று சரியாகுமா?

தேசிய காங்கிரஸின் தலைவர் அதாவுல்லாஹ் கல்முனை மாநகர சபையிலிருந்து மூன்று புதிய உள்ளூராட்சி மன்றங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்தை கடந்த 2010ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு முன்பிருந்தே கூறிவரு கின்றார். அதனை இன்று கல்முனை மாநகர சபையை நான்காக ஒரே நேரத்தில் பிரிக்க வேண்டும் என்று சொல்பவர்கள் அன்று சரி காணத்தவறியது ஏன்?

அதுமாத்திரமன்றி 2015ஆம் ஆண்டு நடைபெற இருந்த பொதுத் தேர்தல் காலத்துக்கு அண்மித்த நாட்களில் ஒரே சமயத்தில் கல்முனை மாநகர சபையை நான்காக பிரிக்கின்ற வர்த்தமானி அறிவித்தலை அதாவுல்லாஹ் வெளியிட உள்ளதாக செய்திகள் பரவியபோது அன்று பிழை கண்டு எதிர்த்து தேர்தல் ஆணையாளருக்கு கடிதம் எழுதியவர்களே இன்று சரி காண்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சி மன்ற உருவாக்கம் மேற்கொண்ட தருணம் ஒரு தேர்தல் கால சந்தர்ப்பம் என்பதினால் பிழையானதென்றால், அதனை அரசாங்கம் இரத்துச் செய்யும்வரை பொறுமை காத்திருக்க வேண்டும். ஏனென்றால் நாம் ஏற்றுக்கொள்கின்ற, நான்காகப் பிரிக்கப்படுகின்ற ஒன்றுதானே வருகின்றது. அது எந்தக் காலமாக இருந்தால்தான் நமக்கென்ன என்ற உணர்வு மேலிட்டிருக்க வேண்டும். அப்படியல்லாது அதனை தடுக்க முனைந்ததென்பது அவர்களுக்கு எப்போதும் உடன்பாடில்லை என்பதை தெளிவாக எடுத்துக் காட்டுவதையே குறித்து நிற்கும்.

தேசிய காங்கிரஸ் தலைவர் பிரித்த எல்லைகளில் பிரச்சினை இருந்து அதனால்தான் இதனை எதிர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் கல்முனைக்குடி மக்களுக்கு ஏற்பட்டிருந்தால் அதனை தெளிவாகச் சொல்லி மறுத்திருக்க வேண்டும். அப்படி எதனையுமே வெளிப்படையாக சொல்லாமல் தேர்தல் காலத்தில் வழங்கப்படுவதுதான் எங்கள் ஆட்சேபனை என்ற வகையில் மறுக்க முனைந்தமை இன்று நான்காகப் பிரிக்கச் சொல்வதற்கு எதிரான மனோவியல்பு என்பது சிறிய அறிவுடையவர்களும் தெளிவாக உணர்ந்துகொள்ள முடியும்.

இப்படி நாம் உறுதியாக அபிப்பிராயப்படுவது மிகையானதல்ல. ஏனெனில், அது தேர்தல்கால எதிர்ப்பு என்றால் அத்தேர்தல் நடந்து முடிந்த பின்னர் இதுபற்றி ஆராய்வதற்கும் பேசுவதற்கும் முயற்சிகளை கல்முனைக்குடி சமூகம் முனைந் திருக்க வேண்டும். அப்படி எடுக்காது நீண்டகாலம் மௌனம் சாதித்துவிட்டு இன்று சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்ற அறிவிப்பு வரப்போகின்றது என்றதும் துள்ளிக்குதித்து தமக்கு உடன்பாடு இல்லாத ஒன்றை முன்வைத்து செயலாற்ற முனைவது நேர்மையான எண்ணத்தின் உந்துதலால் சொல்லப்படுகின்ற கருத்தாக, செயற்பாடாக இருக்க முடியாது என்பது எடுத்துக்காட்டப் போது மானது.

தேர்தல் காலம் என்ற ஆட்சேபனை நியாயமானதல்ல. ஏனெனில் நமது நாட்டைப் பொறுத்தவரை தேர்தல் காலங்களில் செய்யக்கூடாத பல விடயங்கள் செய்யப்பட் டிருப்பதை நாங்கள் பார்க்க முடியும். உதாரணமாக கடந்த 1977களில் நடைபெற்ற பொதுத்தேர்தல் காலத்தின்போது மர்ஹூம் அமைச்சர் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்கள் முன்னிடப்பட்ட திகதியுடைய ஆசிரியர் நியமனக் கடிதங்களை அள்ளி வழங்கினார். ஆயின் தேர்தல் காலம் என்பது ஒரு பொருட்டல்ல.

எப்போதும் கல்முனை மாநகரசபையை நான்காகப் பிரிப்பதில் உடன்பாடு அவர்களிடம் இல்லாமையினால்தான் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இப்போது நாம் முன்னர் சுட்டிக்காட்டியது போன்று உடனடியாக தீர்க்கப்பட முடியாத எல்லைப் பிரச்சினைகளை புரிந்துகொண்டு, அதனை முன்னிறுத்தி மறைமுகமாக சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றத்தை வழங்கக்கூடாது என்பதை வலியுறுத்துகின்ற வகையறா அன்றி வேறில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி மன்றக் கோரிக்கையில் நேரடியாகவே சாய்ந்தமருது ஜும்மாஆப் பள்ளிவாசல் தொடர்புபட்ட ஒன்றாகும். அது முயன்று தோல்வியடையு மேயானால், ஊரே தோற்றுப்போனதற்குச் சமனாகும். ஏனெனில், உள்ளூர் அரசியல்வாதிகள், அரசியல் பிரமுகர்கள் புத்திஜீவிகள், துறை சார்ந்த நிபுணர்கள், ஊர் நலன் விரும்பிகள் போன்றோர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டு அவற்றில் நூற்றுக்கு நூறு வீதம் நியாயம் இருக்கின்றது என்கின்ற அடிப்படையில் இணைந்து செயலாற்ற முன்வந்த ஒரு தூய பணியாகும்.

**ஆதலால் சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கை வெறும் உணர்ச்சிபூர்வமான செயற்பாட்டுக்கு புறம்பாக, உணர்வுபூர்வமான எதிர்பார்க் கையாக அமைந்துவிடுகின்றது. அந்தவகையிலும் நிறைவேற்றப்பட முடியாத ஒரு கோரிக்கையாக சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றம் ஆகிவிடுவது ஆரோக்கியமான நிகழ்வல்ல என்பதை எமது ஜும்மாஆப் பள்ளிவாசல் உணர்ந்துகொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருப்பதை அவர்கள் மறுக்க மாட்டார்களென்றே நம்புகின்றோம்.**

சாய்ந்தமருது ஜும்மாஆப் பள்ளிவாசல் கல்முனை மாநகர சபையை நான்காகப் பிரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையின் பின்னால் சென்றிருக்கவில்லை. சாய்ந்த மருதுக்கான உள்ளூராட்சி மன்றத்தை மட்டுமே அது அன்று தொடக்கம் இன்றுவரை ஈடுபாட்டை காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும். அதனால்தான் பள்ளி நிருவாகசபை ஒருபோதும் தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லாஹ்வின் கருத்தோடு இணங்கிச் செல்லவில்லை.

சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி மன்றத்தை மட்டும் வழங்குவதாக உறுதியளித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சராக இருந்த கருஜெயசூரிய இன்றைய அமைச்சராக விருக்கின்ற பைஸர் முஸ்தபாவோடும் நாட்டின் பிரதம மந்திரியோடுமே தங்களது நியாயபூர்வமான கோரிக்கையை முன்னிறுத்தி கலந்துரையாடல்களை மேற்கொண் டிருந்தது என்பதும் இது விடயத்தில் கவனத்திற்கொள்ள வேண்டிய ஒரு பக்கமாகும். அதேநேரம் **மாகாண சபைகள் அமைச்சராக அதாவுல்லாஹ் இருந்தும் அவரிடம் எமது ஜும்மாஆப் பள்ளிவாசல் நிர்வாகம் செல்லவில்லை என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.**

சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக்கோரிக்கை நியாயமெனக் கண்ட முஸ்லிம் அரசியல் கட்சிகளும், உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர்களும், பிரதமரும் தருவதாக மிகப் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டிருந்த ஒரு விடயமுமாகும். அது கடந்த **ஆகஸ்ட் 2017 இலிருந்து மாறுபட்ட கருத்தாகவும் தருவதில்லை என்கின்ற கோணத் தையும் மேற்குறித்த தரப்பினர்கள் எடுத்திருப்பது போன்ற தோற்றத்தை இன்று அடைந்திருக்கின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுவரெலியா மாவட்டத்தில் புதிய உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்குகின்றபோது சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி மன்றமும் உருவாக்கித்தரப்படும் என்று குறித்த உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா பல கட்டங்களில் கூறியிருந்தார். முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தரப்பினர்கள் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி மன்றம் தோற்றுவிக்கப்படும் என்ற உறுதிமொழிகளையும் தந்திருந்தனர்.

**ஊடகங்களில் வெளிப்படையாக இன்றைய மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சரின் கட்டளைகிணங்க அதன் செயலாளர் வடக்கு மாகாணத்தில் புதிதாக நான்கு சபைகளை உருவாக்குவதற்கான சிபாரிசுகளை செய்து தருமாறும் அங்கு தரமுயர்த்தப்பட வேண்டிய உள்ளூராட்சி மன்றங்களை அடையாளப்படுத்தியும் தங்களுக்கு அனுப்பிவைக்குமாறும் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.**

ஆனால், சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை பற்றியோ அல்லது வேறு கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேசத்தில் முஸ்லிம்களினால் கோரப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் உருவாக்கப்படுவது தொடர்பாகவோ வடக்கு மாகாண சபையிடம் கேட்டுள்ளது போன்று கிழக்கு மாகாண சபையிடம், மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் கேட்டுக்கொண்ட அறிவிப்பு வெளிப்பட்டதாக இல்லை.

“மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்குவதற்கு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு உடனடி நடவடிக்கை மேற்கொண் டுள்ளதென மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு கடந்த 28.092017இல் விளக்கம் அளித்தார். அவ்விளக்கத்தில் மேலும் தெரிவித்ததாவது:-

“மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று பிரதேச சபை எல்லைக்குள் தெற்கு (கிரான்) கோறளைப்பற்று மத்தி என இரண்டு புதிய பிரதேச சபைகள் உருவாக்கப்படல் வேண்டும் (என்பது தொடர்பில்) நாடாளுமன்றத்திலும் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சிடமும் பலமுறை நான் வலியுறுத்தியுள்ளேன்.

எனது கோரிக்கைக்கு அமைய இப்பிரதேச சபைகளை உருவாக்குவதற்கான முறையான அறிக்கையை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் உயர் மட்ட நிர்வாகக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட செயலாளர், கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், மாவட்ட நில அளவை உதவி அத்தியகட்சகர், பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளிவிவரத் திணைக்கள அதிகாரி ஆகியோர் அக்குழுவில் உள்ளடங்கியுள்ளனர்.

குழு தமது அறிக்கையை இம்மாத முடிவுக்குள் அமைச்சுக்கு சமர்ப்பிக்க வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது. (நன்றி - தமிழ் Mirror 29.09.2017)

மேற்படி செய்தியை நாமிங்கு பதிவாக்குவதன் நோக்கு யாதெனில், இப்படி **நமது சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்ற விவகாரத்திற்கு தீர்வுகாணும் வகையில் எத்தகைய முன் ஆயத்தங்களையும் இன்றைய மாகாணசபை, உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபாவோ அல்லது அவரது அமைச்சின் செயலாளரோ எடுத்ததாக எந்த பதிவையும் பகிரங்கமாக இன்றுவரை காண முடியவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக வேயன்றி வேறு நோக்கம் எங்களுக்கு இல்லை.**

## நியாயத்தை மறுப்பது முறையா?

சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கையில் இவ்வூரின் ஜும்மாஆப் பள்ளிவாசல் நிர்வாகம் இறுதியாக நம்பியிருக்கின்றநிலை என்னவென்றால், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஊடாக பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவோடு சாத்திய மாக்கப்படும் என்பதாகும். இவ்வாறு சாய்ந்தமருது ஜும்மாஆப்பள்ளி நிர்வாகம் நம்புவதென்பது வேறு வழியில்லை என்ற கோதாவில் நம்புவார்களேயானால், அது நிரப்பந்த நம்பிகை என்று எடுத்துக் கொள்ளலாம்.

மாறாக உண்மைக்கு உண்மையாக மு.காவின் தலைவர், நாட்டின் பிரதமர் பேசுபவர் களாகவும், வாக்குறுதியளித்தால் நிறைவேற்றக்கூடியவர்களாகவும் இருப்பார்கள் என்ற நியாயங்களில் அடிப்படையில் இவர்களை எமது ஜும்மாஆப் பள்ளிவாசல் நம்புமே யானால், அது ஒரு பகல் கனவாகவே அமையமுடியும் என்ற நமது அபிப்பிராயம் தோற்றுப்போகாது.

**இவ்வாறு நாம் உறுதியாக உரைப்பதற்கு ஒரு முன்னுதாரணமாக இவ்விரு வரும் வாக்குறுதியளித்து சுமார் பதினைந்து (15) வருடங்களாகியும் நிறை வேற்றப்படாத ஒரு சபையின் கதை இருக்கின்றது. அதுதான் கடந்த 2002ஆம் ஆண்டு றவூப் ஹக்கீமும், பிரதமரும் இணைந்து வாக்குறுதியளித்த அக்குறனை உள்ளூராட்சி மன்றமாகும். இந்த சபை உருவாக்கம் தொடர் பிலான குழு ஒன்றுகூட அந்த நேரத்தில் நியமிக்கப்பட்டதென்பதும் குறிப்பிடத் தக்கது.**

**அத்தகைய நிலையில் உள்ள அக்குறனை உள்ளூராட்சி மன்றம் சம்பந்தமாக இன்று மத்திய மாகாணத்தில் புதிய உள்ளூராட்சி மன்றங்கள் பற்றி ஆலோசிக் கப்படும் தருணத்தில்கூட கிஞ்சித்தும் கவனத்தில் கொள்ளப்படவில்லை. இதனால்தான் நாம் வலுவாக குறிப்பிட விரும்புகின்றோம். மு.கா.வின் தலைவரையும், பிரதம மந்திரியையும் நமது உள்ளூராட்சி மன்றத்துக்காக**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நம்பியிருந்தால் ஒருபோதும் நமது ஊரை மையப்படுத்திய உள்ளூராட்சி மன்றம் வரவே வராது.**

சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றத்தை உடனடியாகவும் தனித்தும் வழங்கப்படக்கூடாது என்போர்கள் பிரதானமாக சுட்டிக்காட்டுகின்ற பேராபத்து என்ற போலியான காரணத்தை அதாவது, சாய்ந்தமருது பிரிந்த பின்னர் கல்முனை மாநகர சபையில் முஸ்லிம்களின் அரசியல் ஆளுமை மலினப்பட்டுவிடும் என்கின்ற ஒரு அச்சத்தை மிகக் கச்சிதமாக கூறிக் கூறி எல்லோரையும் ஏற்கச் செய்கின்றனர். உண்மையில் தமிழர்களின் அரசியல் ஆதிக்கம் ஒருபோதும் முஸ்லிம்களைவிட கல்முனை மாநகர சபையில் அதிகரிக்க முடியாது என்பதை ஆய்வு ரீதியாக இக்கட்டுரையின் முன்பகுதியில் நாம் நிரூபித்திருக்கின்றோம்.

அது இப்போது மட்டுமன்றி பல வருடங்களுக்கு முன்பே இதுபற்றி பேசியும் எழுதியும் எடுத்துக் காட்டியுமிருக்கின்றோம். அப்படியிருந்தும் இதனையே அவர்கள் ஒருபிடியாக சொல்லிவருகின்றார்கள் என்றால், இதனைக் கட்டுடைப்புச் செய்து காட்ட வேண்டும். அதற்கு இருக்கின்ற ஒரேவழி ஒரு தேர்தல் களத்தில் அனுபவ ரீதியாக சாய்ந்தமருது மக்கள் கல்முனைக்குடி மக்களுக்கு உணர்த்திக்காட்ட வேண்டும். அதற்கு என்ன வழி என்று நாம் சிந்தித்தாக வேண்டியிருக்கின்றது.

## முதல்வர் பதவிக்குள் சபை பலியா

சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி மன்றம் ஒன்றினை வழங்குவதைப் பார்க்கிலும், அவ்வூரிலிருந்து கல்முனை மாநகரசபைக்குத் தெரிவாகும் உறுப்பினர்களில் இருந்து ஒருவருக்கு மாநகர முதல்வர் பதவியை வழங்கி வைப்பதன் மூலம் தனியான உள்ளூராட்சி மன்றக் கோரிக்கையை தள்ளிவைக்க முடியும் என்று நம்பி சில அரசியல்வாதிகளினால் மந்திர ஆலோசனைகள் நடத்தப்பட்டுவருவதை தற்காலத்தில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் சாய்ந்தமருதுக்கு உள்ளூராட்சி மன்றம் தருவது என்ற வாக்குறுதியை தந்தவர்கள் மறந்து, நம்மை வேறு திசையை நோக்கிய சிந்தனைக்கு இட்டுச் செல்லும் ஆபத்தை தோற்றுவிக்கும் வகையில் அவர்களினால் அண்மைக்கால நடவடிக்கைகள் முடிக்கிவிடப்பட்டுள்ளன.

புதிய உள்ளூராட்சித் தேர்தல் முறைமை பற்றிய செயலமர்வு என்ற போர்வைக்குள் கல்முனை மாநகர சபைக்கான வேட்பாளர்களை தெரிவுசெய்கின்ற கபடத்தனங்களும் வெட்ட வெளிச்சமாகிக் கொண்டிருக்கின்றன.

எது எவ்வாறிருந்தபோதிலும் **தனியான உள்ளூராட்சி மன்றக் கோரிக்கைக்கு மாநகர சபை முதல்வர் பதவி நிகராக முடியாது. முதல்வர் பதவியென்பது தனிமனிதனின் சுகபோகங்களுக்கு வழிவகுக்கக்கூடியதேயன்றி கல்முனை மாநகர சபை எல்லையினுள் வாழ்கின்ற அனைத்தூர் மக்களினதும் தேவைகளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முழுமையாக நிறைவு செய்யக்கூடிய ஒன்றல்ல என்பது மிகத்தெளிவானது. இது கடந்தகாலங்களில் பதவி வகித்த அனைத்து முதல்வர்களும் நேரடியாக அனுபவித்த உண்மையாகும்.**

உண்மையில் சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி மன்றக் கோரிக்கை என்பது அரசியல் அதிகாரத்தை தக்கவைப்பதன் நோக்கத்தில் எழுந்தவையல்ல. மாறாக உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக மக்களுக்கு ஆற்றப்படக்கூடிய சேவைகளை திருப்திகரமாக நமது கல்முனை மாநகர சபை வழங்கமுடியாத இக்கட்டிலிருந்து நிவர்த்திப்பதற்காகவும் சாய்ந்தமருதுக்கென்று ஒரு சபை அமைகின்றபோது கல்முனை மாநகர சபையின் ஒரு பகுதிச் சுமையை குறைத்துவிடுவதற்கு வழிவகுக்கும் என்பதினாலாகும்.

ஆகவே, முதல்வர் கோஷத்தினூடாக சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கையை கைவிடச் செய்வதற்கு எடுக்கப்படுகின்ற எத்தனங்கள் குறித்து நமது ஜும்மாஆப் பள்ளிவாசல் நிர்வாகமும், மக்களும் விழிப்புடன் இருக்கின்றோம் என்பதை நிரூபிக்கும் வகையில் எங்களை சுதாகரித்துக்கொள்ள வேண்டிய எமது நிலையையும் உணர்ந்தாக வேண்டும்.

## ஒன்றிப்பே வெற்றிக்கு வழி

சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றம் உருவாக்கப்படாத நிலையில் வருகின்ற உள்ளூராட்சித் தேர்தலை சாய்ந்தமருது மக்கள் முழுமையாகப் புறக்கணித்து வாக்களிப்பிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்கின்ற யோசனையை பலர் உரத்துப் பேசுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதுவொரு சரியான முடிவு அல்ல என்பதற்கு அப்பால் தேர்தலைப் பகிஷ்கரிப்பதும் வாக்களிப்பிலிருந்து விலகியிருப்பதும் ஒரு ஜனநாயகப் பண்பு இல்லை என்ற வகையில் இந்த யோசனைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் தவிர்க்க வேண்டிய கட்டாயத்திற்கு வரவேண்டியதாகவுள்ளது.

**அந்தவகையில் சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கை நிறைவேற்றப் படுவதன் ஊடாக மறுப்போர்கள் முன்வைக்கின்ற பாதகம் நிகழாது என்பதை நிரூபிக்கும்வகையில் சாய்ந்தமருதுக்கு வகுக்கப்பட்டிருக்கின்ற ஆறு வட்டாரங் களிலும் முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி போன்ற கட்சிகளில் போட்டியிடும் எந்த வேட்பாளரையும் ஆதரித்துக்கொள்ளாத ஒரு சூழலை நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டும்.**

அவ்வாறு நமது ஊர் மக்கள் ஒரு தீர்மானத்துக்கு வருவதாக இருந்தால் அதற்கு ஜும்மாஆப் பள்ளிவாசல் நிர்வாகம் அடையாளம் காட்டும் சுயேட்சைக் குழுவொன்று களத்தில் இறங்குவதற்கு வழிகாட்டிகளாக அரசியல் களத்தில் பங்காற்றுபவர்களாகத் தங்களை மாற்ற வேண்டிய அவசியத்தை உணர வேண்டும். இது தங்கள்மீது நிர்ப்பந்தத்தின்பேரில் ஏற்படுகின்ற நிலைப்பாடு என்பதையும் சாய்ந்தமருது ஜும்மாஆப் பள்ளிவாசல் நிர்வாகம் புரிந்துகொள்ள வேண்டும். தமது அங்கீகாரம் இல்லாதவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தலில் வெல்ல முடியாது என்கின்ற கட்டமைப்பை உருவாக்குபவர்களாக தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.

அப்போதுதான் கல்முனை மாநகர சபையில் இருக்கின்ற சாய்ந்தமருது தவிர்ந்த முஸ்லிம் மக்கள் தெரிவாக்கக்கூடிய பதினொரு (11) வட்டாரங்களிலிருந்தும் முஸ்லிம் பிரதிநிதிகள் ஒன்றித்து ஆட்சி அமைக்கக்கூடிய ஒரு சூழல் அங்கு தோற்றுவிக்கப்படும். அந்த நடைமுறையை அச்சொட்டாக நிரூபிப்பதற்கு நாம் தயாராகாதவரை அரசியல் கட்சிகள் எல்லாம் நமது உணர்வுபூர்வமான சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கையை முன்னிறுத்தி கட்சிகளின் வெற்றிக்கு நமது வாக்குகளை பலப்படுத்து வார்களேயன்றி நமது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கையை வலுப்படுத்த மாட்டார்கள்.

ஒரு விடயத்தை விரும்பிச் செய்கின்ற ஒரு நிலை இருக்கும். இன்னொன்று செய்தே தீர வேண்டிய கட்டாய நிர்ப்பந்தத்தின் அடிப்படையிலும் நாம் விரும்பாத நிலையிலும் அதனைச் செய்ய வேண்டிய நிலை வருவதுண்டு. அதனை ஒத்த ஒரு சந்தர்ப்பம்தான் நமக்கு இன்று ஏற்பட்டிருக்கின்றது. இந்த நியதியை நியாயமாக ஏற்று நமது ஜும்மாஆப் பள்ளிவாசல் இந்த விடயத்தில் முடிவுகட்டுவதற்கு துணிய வேண்டும்.

ஊர்மக்களை ஓரணியில் இணைக்க வேண்டிய காலத்தின் கட்டாயத்தில் சாய்ந்தமருது ஜும்மாஆப் பள்ளி நிர்வாகம் இருக்கிறது என்பதை சரியாக உணர்ந்து செயல் வடிவத்திற்கு தங்களை அர்ப்பணிப்புடன் பங்களிப்புச் செய்வதற்கு துணிவதில்தான் இக்கோரிகையின் வெற்றியும் தோல்வியும் தங்கியிருக்கின்றது. இதனை உணர்வார்களா? உருப்படியாகச் செயற்படுவார்களா? காலம்தான் பதில் சொல்லும்.

## நமது மக்களின் தியாகம்

சாய்ந்தமருதூரைப் பொறுத்தவரை அது ஒருபோதும் கல்முனைக்குடி சமூகத்தினருக்கு துரோகம் இழைக்கின்ற பாங்கில் செயற்பட்டதில்லை. இதற்கு நல்லதொரு உதாரணமாக, சாய்ந்தமருதின் வடக்கு எல்லையில் அமைந்திருந்த ஒன்று தொடக்கம் தொன்னூற்று ஏழு வரையுள்ள வீட்டு அட்டவணைக்குரிய வாக்காளர்களை கடந்த 1945ஆம் ஆண்டளவில் கல்முனைப் பட்டினசபையாக அந்தஸ்த்துப் பெறுகின்றபோது அதன் ஏழாம் வட்டாரத்திற்கு வாக்காளர்கள் தொகை அதிகரிக்கப்பட வேண்டியதன் நிமிர்த்தம் தாரைவார்த்துக் கொடுத்தது.

பின்னர் 1986களில் சாய்ந்தமருது வடக்கு எல்லையில் இருந்த வாக்காளர்களை கல்முனையின் தெற்கு எல்லைக்காக விட்டுக் கொடுத்துள்ளனர். இதன் விரிவான விளக்கங்களை வாசிக்க விரும்புவோர் சாய்ந்தமருது ஜும்மாஆப் பள்ளிவாசல் வெளியிட்ட "சாய்ந்தமருதூரின் வடக்கு எல்லையும் பொது மக்கள் அறிய வேண்டிய உண்மைகளும்" (1997) வெளியிட்ட நூலிலும் பின்னர் கல்முனை நகர சபையாக தரமுயர்த்தப்படுகின்றபோதும் குறித்த எல்லையிலிருந்து சாய்ந்தமருது மக்கள் விட்டுக்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதை "சாய்ந்தமருது வரலாறு" (2009) என்ற நூலிலும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் அடிப்படையில் சாய்ந்தமருதின் வடக்கு எல்லையாக அமைந்திருந்த ஸம்ஸம் அரிசி ஆலை (ஸம் ஸம் அரிசி ஆலை என்பது தற்போது கல்முனை நகர மண்டபம் அமைந்திருப்பதற்கு முன்னுள்ள பகுதியாகும்) வரையான பகுதி குறைக்கப்பட்டு சாய்ந்தமருதின் வடக்கு எல்லையானது ஸாஹிறா கல்லூரி வீதியாகவும், கானடி ஒழுங்கையாகவும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. இது ஒரு சமச்சீராக்கல் என்ற அடிப்படையில் ஆக்கப்பட்டதாக சிலர் வாதிக்கக் கூடும். அதனை, மறுதலையாக திருப்பிப் பார்ப்போமேயானால் கல்முனைக்குடியிலிருந்தும் சிறு பகுதியை இணைத்தும் சமச்சீராக்கம் செய்திருக்க முடியமல்லவா? ஆயின் அது சாய்ந்தமருது மக்களின் விருப்போடு நடைபெற்றதாகவேதான் பார்க்கப்படல் வேண்டும்.

மேற்படி விட்டுக்கொடுப்பில் 1945இல், 1986/87 காலப்பகுதிகளில் சாய்ந்தமருது ஊரின் வடக்கு எல்லையில் விட்டுக்கொடுப்புச் செய்ததென்பது ஒரு அமைதியான சூழலில் நடைபெற்றிருந்தாலும் 2000ஆம் ஆண்டளவில் நடைபெற்ற வடக்கு எல்லை விட்டுக்கொடுப்பென்பது ஒரு நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் நிகழ்கின்றது. அதாவது, சாய்ந்தமருது உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதற்காக அன்று கல்முனைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த பிரதிநிதியின் வேண்டுகோளுக்கிணங்க நிர்ப்பந்த நிலையில் நடைபெற்றதென்பது சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

**இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் கடந்த 1996.09.04ஆம் திகதி நடைபெற்ற கல்முனைப் பிரதேச சபையின் துணைத் தவிசாளர் கே.எம்.அப்துல் றஸாக் (ஜவாத்) அவர்களின் தலைமையிலான அமர்வில், நிருவாக அமைப்பிற்கு ஒவ்வாத நிலையிலிருக்கும் குடியிருப்புப் பகுதியை சீராக்குதல் என்ற அடிப்படையில் பிரேரணை ஒன்று உறுப்பினர் எம்.எம்.எம். ஜெமீலினால் கொண்டுவரப்பட்டது. அதனை வழிமொழிந்தவர் ஐ.எல்.அப்துல் அஸீஸ் ஆவார். ஆகவே சாய்ந்தமருது மக்கள் ஒருபோதும் கல்முனைக்குடி மக்களுக்கு துரோகம் இழைக்கவில்லை என்பதை இதனூடாக தெட்டத் தெளிவாக அறிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது.**

## அர்த்தமற்ற வாதம்

1987களுக்கு முன்னர் கல்முனையில் இருந்துவந்த நான்கு உள்ளூராட்சி சபைகள் ஒரே சமயத்தில் ஒன்றாக்கப்பட்டது. அதிலிருந்து சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி மன்றம் மட்டும் முதலில் பிரிவதும் ஏனையவை பின்னர் பிரிவதென்பதும் கூடாத செயலென்ற ஒரு குற்றச் சாட்டையும் இது விடயத்தில் சிலர் முன்வைக்கின்றனர்.

உள்ளூராட்சி சபைகள் 1987களில் கொண்டுவரப்படுகின்றபோது கல்முனை மட்டுமன்றி நாட்டின் பல பாகங்களிலும் இருந்த மொத்த சபைகளில் பல இடங்களில் இவ்வாறு ஒன்றிணைக்கப்பட்டிருக்கின்றது. அவற்றில் சில பின்னர் தனித்து பிரித்து வழங்கப் பட்டுள்ளது. அதேபோன்று ஒன்றாக இருந்த சபைகள்கூட பிரிக்கப்பட்டு புதிய சபைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு உதாரணமாக, களனி உள்ளூராட்சி மன்றத்தி லிருந்து பியகம என்ற உள்ளூராட்சி சபை உருவானதை எடுத்துக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, ஒரே நேரத்தில்தான் பிரிய வேண்டுமென்று சொல்வதில் எந்த நியாயங்களு மில்லை. மக்கள் தொகை பெருகுகின்றபோது தேவைகள் பெருகுவதும் இயல்பானது. அதற்கு இணக்கமாக புதிய உள்ளூராட்சி சபைகள் உருவாக்கப்படுவது நமது நாட்டில் புதிதான ஒன்றல்ல. மாறாக நடைமுறையில் இருந்துவருகின்ற ஒன்றென்பதினால் கல்முனை மாநகர சபையிலிருந்து முதலில் சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றம் உருவாக்கப்படுவது முறையான ஒன்றென்பதும் ஆணித்தரமாக குறிப்பிடத்தக்க விடயமென்பதில் ஐயமில்லை.

இப்படி கல்முனைக்குடி தரப்பினால் முன்வைக்கப்படுகின்ற சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றத்துக்கு எதிரான எல்லா கூற்றுக்களும் ஒரு வன்மை உணர்வோடு முன்வைப்ப தாகவே அமைவதைப் பார்க்கலாம். இதனைத் தவிர்த்து நமது நாட்டில் அறிமுகப்படுத்தப் பட்டிருக்கின்ற உள்ளூராட்சி மன்றங்களின் முறைமையின் அடிப்படை யிலும் அதன் தொழிற்பாட்டின் மாதிரியிலும் இலகுவாக இயங்குவதற்காகவேண்டி கோரப்படுகின்ற ஒன்றுதான் சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கை என்பதை நிதானமாகவும், அறிவுபூர்வமாகவும் சிந்திக்கும் எவரும் மறுக்க மாட்டார்கள் என்பது திட்டவட்டமானது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் சமூகத்தின் துயர்களை துடைப்பதற்கும் எதிர்காலத்தில் நமக்கு பேரினவாதத்தினால் அநீதிகள் நிகழ்ந்துவிடாது காப்பதற்குமான ஓர் உரிமைத்துவக் கட்சி என்ற அடையாளத்துடன் அறிமுகமான ஓர் அரசியல் கட்சியாகும்.

இதனை முற்றிலும் நம்பி அக்கட்சி முதன்முதலில் தேர்தலை சந்தித்த 1988 இணைந்த வடகிழக்கு மாகாண சபை தேர்தல் மற்றும் 1989 பொதுத்தேர்தல் காலம்தொட்டு இன்றுவரை நம்மிடம் வந்த அனைத்து தேர்தல்களிலும் அதன் தோற்றப்பாட்டு காரணங்களை நம்பி, நமக்கான உரிமைத்துவக் கட்சி என மேலும் நம்பிய மக்களில் நமது சாய்ந்தமருது மக்கள் முதன்மை இடத்தைப் பெறுகின்றனர்.

இன்று நமது மக்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டும்தான் நமது உரிமைத்துவக் கட்சி என்று நம்பியிருக்கின்றோம். இதனை தேர்தல் காலங்களில் நமது வாக்குகளை பதிவாக்கும் கோணம் வெட்டவெளிச்சமாக தெரிவித்திருக்கின்றன. ஆனால், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமது இலக்கினை சிதைத்து மாமூல் அரசியல் செயற்பாட்டுக்குள் தன்னை உட்படுத்திக்கொண்டதை நமது சாய்ந்தமருது மக்கள் உணர்ந்துகொள்ளாது இருக்கின்றோம்.

நமது முஸ்லிம் அரசியல் களத்தில் இன்று பெரிதாக கால்பதித்தும் சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றத்தை ஏதோ ஒருவகையில் தருவதாக காட்டிய முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் ஆகிய மூன்று கட்சிகளும் முஸ்லிம் சமூக உரிமைத்துவ கட்சிபோன்று எம்மிடம் காண்பித்துக் கொண்டாலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை அனைத்தும் நமது சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்ற கோரிக்கையை நிறைவேற்றித்தருவதில் பொய்யான வாக்குறுதிகளை தந்தனவாகவும் அதனை இதயசுத்தியுடன் செய்வதற்கான எந்த முயற்சியையும் உருப்படியாக எடுத்திராத கட்சிகளாக இருப்பதை நமது மறக்காத நினைவுகளில் ஆழமாய் பதித்துவைக்க வேண்டிய கட்டாயத்தை இன்று ஏற்படுத்தியிருக்கின்றது.

**இதனை சரிவர உணர்ந்து அரசியல் தெரிவுப்பாதையை சரியாக அமைத்துக் கொள்வதற்கு எம்மை நாம் தயார்படுத்த வேண்டும். அதற்கு நமது சாய்ந்த மருது ஜும்மாஆப் பள்ளிவாசல் நிர்வாகம் நீதியான வழிகாட்டலை நேர்மை யாகச் செய்வதற்கு முன்வருதல் வேண்டும்.** நியாமான எண்ணங்களும், நேர்மையான எதிர்பார்ப்புக்களும் புதைகுழியில் புதைக்கப்பட்டு விடுகின்ற அவலத்தில் இருந்து எம்மை எழுச்சிபெற செய்யவேண்டுமானால், அதற்கான விழிப்புணர்வுகளை நமக்குள் நாம் ஏற்படுத்தாதவரை சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்ற கோரிக்கையைப் போன்ற நியாயமான நமது பல எதிர்பார்ப்புக்கள் வெற்றிபெறாது.

உண்மையில் எங்களை நாங்கள் வெற்றியாளர்களாக மாற்றிக்கொள்கின்ற கோணங்களில் செப்பனிடப்படவில்லையானால் நாம் ஒருபோதும் எதிலும் வெற்றியை தழுவிக் கொள்ளமாட்டோம். பின்வரும் திருமறை வசனத்தை ஒன்றுக்குப் பலமுறை திரும்பத் திரும்ப நினைவுபடுத்தி எம்மை நாம் மாற்றாதவரை நமது நிலை இதுதான்.

**"மனிதர்கள் தங்களை மாற்றிக்கொள்ளாதவரையில் நிச்சயமாக அல்லாஹ்வும் அவர்களின் நிலமையை மாற்றிவிடுவதில்லை" (குர்ஆன் 13:11)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணை நின்றவை:


01. சாய்ந்தமருது வரலாறு - சாய்ந்தமருது ஜும்மாஆப் பள்ளிவாசல் வெளியீடு – 2009.

02. சாய்ந்தமருதூரின் வடக்கு எல்லையும் பொது மக்கள் அறிய வேண்டிய உண்மைகளும் - சாய்ந்தமருது ஜும்மாஆப் பள்ளிவாசல் வெளியீடு - 1997.

03. இலங்கை அரசியல் - பேராசிரியர். அம்பலவாணர் சிவாராசா – 2006 (06ஆம் பதிப்பு)

04. Ceylon Government Gazette, Published by Authority No. 5,459- Friday, February 19, 1897.

05. 1986ஆம் ஆண்டின் கல்முனைத் தேர்தல் தொகுதி வாக்காளர் இடாப்பு.

06. அரசாங்க வர்த்தமானி இல. 195 (1975.12.19).

07. தினகரன் - 23.04.1999.

08. சாய்ந்தமருது பிரதேசத்திற்கு தனிப் பிரதேச சபையும் பிரதேச செயலகமும் தேவை - எம்.எம்.எம்.நூறுல்ஹக், தினக்குரல் - 1999.05.14,

09. சாய்ந்தமருது தனிப் பிரதேச சபை கோரிக்கையின் அவசியமும் நியாயமும் - எம்.எம்.எம்.நூறுல்ஹக். தினகரன் - 2010.05.06, தினக்குரல் - 2010.02.07, நவமணி - 2010.02.21, விடிவெள்ளி - 2010.02.11, எங்கள் தேசம் - 2010.02.15-28, மீள்பார்வை - 2010.03.05 நல்லுறவு - 2010.01.15-31, சுடர்ஒளி - 2010.02.02.

10. சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தயங்கக்கூடாது, எம்.எம்.எம்.நூறுல்ஹக். தமிழ்த்தந்தி - 2015.11.01, சுடர்ஒளி ஞாயிறு வெளியீடு - 2015.11.01, விடிவெள்ளி - 2015.01.30

11. சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றம் அரசியல்வாதிகளின் பலப்பரீட்சை, எம்.எம்.எம்.நூறுல்ஹக், நவமணி - 2017.01.16.

12. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகை - அதி விசேஷமானது - 2006.10.13.

13. தமிழ் Mirror - 29.09.2017




**நன்றி:**

இந்நூலின் தளக்கோளம் மற்றும் கணணி மயப்படுத்துதல் உட்பட இந்நூல் வெளிவருவதில் பெரிதும் உதவிய சகோதரர் எம்.ஐ.சர்ஜுன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Ceylon Government Gazette

MINUTES BY THE GOVERNOR




சாய்ந்தமருதூரின் வடக்கு எல்லையும்



...யந்தமருதுக்கு தனிப் பிரதேசசபை

சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்ற...

அரசியல் வாதிகளின் படிப் பரீட்சை







சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

தயங்கக்கூடாது








விடிவெள்ளி

சாய்ந்தமருது தனிப் பிரதேச சபை


கோரிக்கையின் அவசியமும் நியாயமும்

மருதம் கலை இலக்கிய வட்டத்தின் அச்சு சாதனங்களின் துணையோடு


இப்பிரசுரம் 01.10.2017 இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமவெளி பிரதம ஆசிரியர்



சமவெளி ஆசிரியர்



சமவெளி எல்லோருக்குமான பொதுவெளி

# சமவெளி
# Samaveli

பிரதம ஆசிரியர் : உவைஸ் முஹமத்

ஆசிரியர் : நூறுல்ஹக்

web : www.samaveli.com

FB Page : Samaveli News

FB Profile : சமவெளிசெய்திகள்

Twitter : Samavelinews

Google+ : Editor Samaveli

**விரைவில் தோற்றம் பெறுகிறது**

# STV

**FB Page : Samaveli News**

## www.samaveli.com

**E-Mail : editorsamaveli@gmail.com**

**எமது செய்திகளை உடனுக்குடன்**
**உங்கள் தொலைபேசியில் பெற்றுக்கொள்ள**

**Follow (இடைவெளி) Samavelinews என type**
**செய்து 40404 க்கு அனுப்புங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org